கழக வெளியீடு - கக

உ

திருச்சிற்றம்பலம்

குளத்தூர்

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

ஸ்ரீ சிவஞான சுவாமிகள்

அருளியது

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி. :: சென்னை-1.

Frist Edition: Aug., 1927.
Second Edition: June, 1953.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS - 1.

Head Office:

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

Appar Achakam. 2/140, Broadway, Madras-1.

உ

திருச்சிற்றம்பலம்

ஆசிரியர் கருத்து

மனம்வாக்கில் எட்டாத சிற்சத்தி ஆயினும்
மன்பதைகள் உய்யவேண்டி
மலையரையன் முதலோர் இடத்தவ தரித்தொரு
மடப்பிள்ளை யாய்வருதலால்
இனநாட்டி வாழ்த்திடுவர் பெரியோர்கள் வாழ்த்தற்
கெடுத்தவித் தாரகவிதாம்
எண்ணிடிற் பலவாம் அவற்றிற்கும் முதலாக
ஏன்றபெண் பிள்ளைக்கவி
முனிவோட்டு காப்புநற் கீரைதால் சப்பாணி
முத்தம்வா ரானைமற்றும்
மொழியும் அம் புலிப்பருவம் அம்மானை நீரூசல்
முறையினை யிருபருவமும்
நனிவாய்த்த அகவலின் விருத்தத்தி னூற்பாடி
நவிலுமுத் திங்கள் முதலா
நயந்தமூ வெழுதிங்கள் அளவினிற் கேட்பிக்கு
நன்மைய தெனப்பு கல்வரே.

வாக்கு - சொல், சிற்சத்தி - ஞான சத்தி. மன்பதைகள்-மக்கட் கூட்டங்கள். மலையரையன் முதலோர் - மலை வேந்தனை பனிமலையரசன், மலையத்துவசன் முதலானவர்கள். மடமை - இளமை. ஏன்ற - பொருந்தின. முனிவு - சினம் (வெறுப்பு). ஓட்டுதல் - நீக்குதல். கீரை - செங்கீரை, முதற்குறை. நீர் - நீராடல். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பத்துப் பெண்பிள்ளைப் பாட்டுப் பருவங்களும் மூன்ருந் திங்கள்முதல் இருபத்தொரு திங்கள் வரை கூறப்படுவனவெனக் கூறும் இலக்கண விளக்கப் பாட்டியல் இதற்கு இலக்கணமெனத் தோன்றுகின்றது. ஆயின் இதில் இப்பருவங்கள் பத்தில் அம்புலிப்பருவத்தின்பின் கூறப்படும் பெண்பாற்குரிய கழங்கை நீக்கி, நீராடல் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்னுங் கவிகள் நான்கில் பிள்ளைக்கவி வித்தார கவியின் முதலாவது என்பதை இதனுல் குறித்தவாறுணர்க. (க)

அவையடக்கம்

இளம்பருவ விளையாட்டை நோக்குழித் திருவுரு
இடத்தாசை மிகுதியுண்டாம்
என்பதால் வித்தார கவிக்கெலா முன்னுற
இயன்றபிள் ளைக்கவியிதைக்
குளந்தையிற் சோமேசர் மார்பிணைக் கொங்கையாற்
குழைவித்த அமுதவல்லி
கோமளப் பருவத்தில் அருகொன்று தாதியர்சொல்
கூற்றெனப் புகழ்தலுற்றேன்
வளம்பெருகும் இமையவரும் எத்தொணுப் பெருமாட்டி
மகிமையென் புன்மொழிகளால்
வாழ்த்தரிய தாமெனினும் ஆங்கவள் கிரிக்கிறைவன்
மகளாகி யதுவுமல்லால்
உளங்கொடியர் வாழ்வலைச் சேரியினும் அவதரித்
தொளிர்பாசி சங்குபூட்டி
உள்மகிழ்ந் தருளுதலின் என்மொழிக் கும்பெரி
துவந்தருள் சுரக்குமெனவே.

பிள்ளைக்கவி - பிள்ளைத்தமிழ். இயன்ற - பொருந்தின. குளந்தை - குளத்தூர். சோமேசர் - குளத்தூரி லெழுந்தருளியுள்ள இறைவன் பெயர். அவர்பேரிற் பாடினது சோமேசர் முதுமொழி வெண்பா என்றுணர்க. அமுதவல்லி-குளத்தூர் இறைவி. அருகு-கிட்ட. ஒன்றுதல் - இருத்தல். கூற்று - சொல். எத்த+ஒணு - எத்தொணு அகரந்தொகுத்தல். புன் மொழி - அற்பச் சொல். இறைவியானவள் மலையரசன் மகளாய் உயரணிகள் பூண்டு கொண்டதுமன்றி, வலைச்சேரியினுந் தோன்றிக் கருமணி, சங்கு முதலியவற்றையும் அணிதலின் என் சிறுமொழிக்கும் அருள் செய்வள் என்பார், 'கிரிக்கிறைவன் மகளாகியதுவுமல்லால் - உளங் கொடியர் வாழ்வலைச் சேரியினுமவதரித் தொளிர் பாசி சங்குபூட்டி-உண் மகிழ்ந்தருளுதலினென் மொழிக்கும் பெரிதுவந்தருள் சுரக்குமெனவே' எனக் கூறினர்.

இது தோழிகள் கூற்றாகக் கூறப்பட்டது.

சோமேசர் மார்பினைக் கோங்கையாற் குழைவித்தமை:—

இறைவி காஞ்சிபுரத்திற் கம்பையாற்றில் இறைவனை வழிபட்ட ஞான்று இறைவர் அம்மையார் அன்பின் வன்மையை உணர வேண்டி அவ்வாற்று நீரைப் பெருக்குவிக்க, அது கண்ட அம்மையார், தாம் வைத்த இறை வடிவத்திற்கு யாதோர் பழுதும் வாரா வண்ணம் தம் இரண்டு கைகளால் தழுவி அணைத்துக் கொண்டார். அவ்வாறும் விலகியோடிற்று. ஒரு மாமரத் தனிப்பெருங் கடவுளும் (ஏகாம்பர நாதரும்) அவ்விறைவியின் அன்பிற்குத் திருமேனி குழைந்து வளைத்தழும்பும் முலைச்சுவடும் பதியப் பெற்றுக் காட்சியருளினார் என்பது. இதைக் காஞ்சிப்புராணம் தழுவக் குழைந்த படலத்திற் காண்க. (உ)

உ

திருச்சிற்றம்பலம்

குளத்தூர்

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

விநாயக வணக்கம்

மணிகொண்ட கோடொரு மருங்குண்மை யாற்பெண்மை
வடிவென்றும் அஃறிணையோர்
மருங்குண்மை யாலாண்மை வடிவென்றும் மீதுகீழ்
மாறிய திருக்காட்சியால்
அணிகொண்ட உயர்திணைய தென்றும்அஃறிணையென்றும்
யார்க்குங் கிளக்கஅரிதாம்
ஐங்கரச் சிந்துரத் தின்கழற் செஞ்சரணம்
அஞ்சலித்துத் துதிப்பாம்
பணிகொண்ட துத்திப் படத்திற் கிளைத்தவிர்
பருஉமணி விளக்கினொருபால்
பாயிருட் படலஞ் செறிந்தொளிர்வ தென்னவப்
பாம்பணை கிடக்கும்ஒருவன்
திணிகொண்ட மல்லற் புயக்குவடு விம்மத்
திளைக்குமகள் வாணிபிரியாத்
தென்குளந் தாபுரி யிருந்தவமு தாம்பிகை
செழுந்தமிழ்க் கவிதழையவே.

மணி - முத்து (யானைக்கொம்பில் முத்துப் பிறப்பதால்). மீது கீழில் மீதென்பது முகமும், கீழ் என்பது காலும். மாறிய காட்சி - யானை முகமும், மக்கள் அங்கங்களாகவும் மாறியிருத்தல். யானை முகமாகிய அஃறிணையும் மக்கள் அங்கங்களாகிய உயர்திணையும் விரவிய ஒரு வடிவினனாதலால் உயர்திணையதென்றும் அஃ

றிணையென்றும் யார்க்குங் கிளக்கவரிதாம் என்றார். உயர்திணையது, இதில் அது பகுதிப் பொருள்விகுதி. மீது கீழ் என்றதற்கேற்ப அஃறிணை யென்றும் உயர்திணை என்றும் மாற்றுக. ஐங்கரச் சிந்துரம் இதில ஐங்கரம் என்பது யானையினின்று பிரித்து மூத்த பிள்ளையாரை உணர்த்திற்று. துததி-படப்பொறி. பரூஉ-பருமை. குளந்தாபுரி - குளத்தூர். (௩)

க. காப்புப் பருவம்

திருமால்

சீர்கொண்ட கஞ்சக் கிழத்திதன் காந்தனைச்
சிறைசெய்த வாறறிந்தாற்
செயிர்த்துநந் திருமனைவி மகன்மருகி தமையெலாஞ்
சிறைசெய்யும் என்றறிந்தும்
ஏர்கொண்ட மைத்துனக் கேண்மையால் அர்ச்சுனற்
கிறுதிநாள் பயவாமையே
எண்ணிமுன் பரிதியைப் பரிதியால் தடைசெய்த
ஏந்தற் பிரான்புரக்க
பேர்கொண்ட மேனிலச் சோபான மிசையேறு
பேதைமார் முகநோக்கிநம்
பேரரசு கொள்ளவரு மதிபோலும் இதுவெனப்
பெரிதுமேக் குற்றவர்கள்தம்
கார்கொண்ட பின்னற் கரும்பாந்தள் கண்டுளங்
கவலாது களிகூர்ந்துதண்
கலைமதியம் வைகுபொழில் சூழ்குளத் தூர்வருங்
கடவுட் பிராட்டிதனையே.

கஞ்சம் - தாமரை. கிழத்தி - உரியவள் (இல்லாள்), தாமரையாகிய இல்லாள். காந்தன் - தலைவன், (அகமுடையான்) சூரியன். தாமரைக்குத் தலைவன் சூரியன் என்றபடி. சிறை செய்தவாறு-ஆழியால் மறைத்த வழி. மனைவி - திரு (இலக்குமி). மகன் - பிரமன். மருகி - கலைமகள். சிறை செய்யும் - வெளியே வராவண்ணம் இதழ் குவித்துக்கொள்ளும். பாரதப்போர் பதினான்காவதுநாளில் அபிமன்னனைக் கொன்ற சயத்திரதனை 'அந்திபடு மவ்வளவில் ஆவிகவரேனேல் வெந்தழலில் வீழ்வன்' என அருச்சுனன் சூளுரை கூறியதறிந்து, அன்றிரவு வரும் வரை மறைந்திருந்த அச்சயத்திரதன் வெளிவரும்படி கண்ணன் ஆழியாற் சூரியனை மறைத்தமையை

அவன் இல்லாளாகிய தாமரையறியின் தாமரையில் இருக்கின்ற அக்கண்ணன் மனைவியான திருவும், அவன் மகனான பிரமனும், அவன் மருகியான கலைமகளும வெளிவாராவாறு தன்னிதழ் சுருக்கிக்கொள்ளும் என்றபடி. கேண்மை - உறவு. இறுதிநாள் - ஆயுள் முடிவு. பரிதி - சூரியன். பரிதி - ஆழி. சோபானம் - படி. எக்குற்று - கவலை யடைந்து. பின்னல் கரும் பாம்பு-சடையாகிய கரிய பாம்பு. உளம் கவலாது - மனம் வருந்தாமல். (௪)

சிவபெருமான்

வேறு

அளிசு ரந்தமரர் பசிகெ டும்படியின்
அமிழ்து தந்தகதிர் கொள்சடைக் காட்டிடை
அழல்வி டஞ்சொரியும் அரவி னம்பசிய
அறுகு வெண்தலைகள் பல்குறச் சூட்டியும்
அரிய யன்பரச அவரி டும்பைதெறும்
அலர்செ ழுங்கமலம் வெல்கரத் தோட்டிடை
அணைவு றும்பொருள்கள் கருக வெம்புசுடர்
அவிரும் அங்கியினை வெய்தெனக் காட்டியும்
இளிவ ரும்பொன்மலை வளையு முன்பவுணர்
எயிலொ ருங்கவிய எள்ளுபொன் தோட்கிடை
இடுவ னங்களினில் உயிர்ம டிந்தவர்தம்
இகழும் என்பினையும் ஐதெனப் பூட்டியும்
எழுத ருஞ்சொன்மறை முடிவும் அன்பர்தம
திதய மும்பரவ நல்குமெய்த் தாட்டுணை
எமது புன்தலையும் உறந யந்துமரு
ளியப ரம்பரனை உள்ளுறச் சேர்த்தும்
தளிர்து வன்றியிருள் படலி முன்றுகுளிர்
தழுவி வண்டுறைதை செய்துணர்ப் பூத்திரள்
தழைவு கொண்டுநறு மணம ளைந்துமகி
தலம சும்புபட வெள்ளமட் டேற்றெழு
தரவ ளர்ந்துமுகில் அகடு டைந்தழகு
தபவு தைந்துதிசை யெல்லையைக் காத்திடு
தறுகண் எண்கரியை முடுகு றுங்கருவி
தருமி தென்றெவரும் விள்ளமொய்த் தார்த்தவிர்

ஒளியு மிழ்ந்துலவு பரிதி மண்டலமும்
உடுப மண்டலமு மில்லெனத் தாழ்த்திவிண்
ணுலகு சென்றுசுரர் தருவொ டும்பழகி
உறவு கொண்டுமகிழ் பல்வளக் காக்களின்
உறைப சுங்கிளிகள் சுருதி சந்தையுடன்
உரைசெய் கின்றதனை மல்குபுத் தேட்குலம்
ஒளியி ருந்துகவர் பதிகு ளந்தைவரும்
உரைவி ளங்கமுத வல்லியைக் காக்கவே.

அளி - களிப்பு. அமிழ்து தந்த கதிர் - திங்கள். விடம் - நஞ்சு. அரவு இனம் - பாம்புக் கூட்டம். வெண்தலைகள் - வெள்ளிய தலைமாலைகள். பரசுதல் - வழுத்தல். தெறுதல் - அழித்தல். அவுணர் எயில் - முப்புரவாசிகள் கோட்டை. ஒருங்கு - முற்றும். இடுவனம் - இட்டகாடு. காடு இடுகாடு, சுடுகாடு என இருவகைத்து. ஐது-அழகுடையது. உள் மனம் (உள்ளம்). சடைக்காட்டிடை அரவினம், அறுகு, வெண்டலைகள் சூட்டியும், அங்கியினை வெய்தெனக் காட்டியும், என்பினை ஐதெனப் பூட்டியும் அருளிய பரம்பரனை உள்ளுறச் சேர்த்தும் எனக்கூட்டுக. துவன்றி-நெருங்கி. நிழன்று-நிழலைச்செய்து துதைதல்-நெருங்குதல். ததைவு - செறிதல். அளைந்து - கலந்து. மகிதலம்-பூமி. அசும்புபட - வழுக்க. வெள்ளம் மட்டு - தேன் வெள்ளம். முகில்-மேகம். அகடு-வயிறு. தப - கெட. தறுகண் - அஞ்சாமை. எண்கரி - எட்டு யானைகள். முடுகு உறும் கருவி - ஓட்டுகின்ற கோல். விள்ள - சொல்ல. உடு - விண்மீன. பம் - விண்மீன். இவ்விரண்டும் ஒருபொருள் குறித்த சொற்கள். உமிழ்தல் - வெளியிற் செலுத்தல். சுரர்தரு - தேவதருக்கள். காக்கள் - சோலைகள். சுருதி - மறை. சந்தை - மறையோதும் இசை. புத்தேள் குலம் - தேவர் கூட்டம். ஒளியிருந்து - மறைந்திருந்து. கவர்தல் - பெறுதல். (௫)

விநாயகக் கடவுள்

வேறு

ஒற்றைச் சுதைத்தனுக் கோட்டியெங் கணுமின்னி
ஓவாது மும்மாரிபெய்
தொண்பூ தலத்துலவு செங்கொண்டல் போலுமென்
றுன்னியச் சுற்றியாமிதற்
கெற்றைக்கு மூர்த்தியாய் உற்றிடக் கடவமென்
றிருண்மேகம் அருகுவந்தாங்

கிலகுகரு மூடிகத் தாதிப் பிரான்சரணம்
ஏத்தெடுப் பாமெம்பிரான்
கற்றைப் பிறைக்கொழுந் தொளிர்சடில வட்டமேற்
கணமணிப் படம்விரித்துக்
கண்வளரு மகிர்மை தலையுவா ஞான்றுசெங்
கதிர்க்கிர கணங்கடுக்கும்
பெற்றித் திறந்தெரிந் தானந்த வெள்ளப்
பெருங்கடல் குடைந்தாடுறாஉம்
பெண்ணணங் கரசியைத் தென்குளத் தூரெம்
பிராட்டியைக் காக்கவெனவே.

...

ஒற்றைச் சுதைத்தனு - ஒன்றாகிய வெண்ணிறமுள்ள வில்லை யென இரண்டனுருபு விரிக்க. கோட்டி-வளைத்து. ஓவாது-ஒழியா மல். அச்சுற்று - அஞ்சி. ஊர்தி - வாகனம். மூடிகம்-பெருச்சாளி. இச்செய்யுளில் மூத்த பிள்ளையாரைச் செம்மேக மென்றதினால் அவர் கொம்பை வில்லாகவும், ஒளியை மின்னலாகவும், மதத் தினை மும்மாரியாகவும் கூறினமை காண்க. கற்றை - கூட்டம். சடில வட்டத்தைச் சூரியனாகவும், அதிலிருக்கின்ற பாம்பைச் சூரி யனைப்பற்றிய பாம்பாகிய கேதுவாகவுங் கொள்க. கணம்-திரட்சி. அகிர்மை - பாரிருக்குந் தன்மை. கடுக்கும் - ஒக்கும். (க)

முருகக் கடவுள்

மாங்குயில் துரந்துசுவை ஊற்றெழ மிழற்றுமொழி
வானமீன் மாதராவர்
மருமத் தெழுந்தபொன் வள்ளத்தின் அமிழ்துண்டு
மருவிவாழ் தற்குரியதன்
தேங்கமல வீட்டினைத் தனதெனக் கொண்டுவாழ்
திசைமுகனை வெய்துயிர்த்துச்
சிரநான்கு மோதிப் புடைத்துப் பிணித்துவன்
சிறையிட்ட தேவைநினைவாம்
ஓங்கலொடு வில்லா வளைத்தெயில் நகைத்தனலை
ஊட்டியருள் சோமேசனார்
ஒருமூ விழிக்கிடைந் தஞ்சிச் சரண்புகுந்
தோலமிடு புண்டரிகம்

பூங்குவளை மாரனுக் கருள்செய்து முகமெனப்
போர்கொண்ட வாள்விழியெனப்
பொய்த்தநுண் ணிடையெனத் தாங்குங் குளந்தா
புரிக்குளமு தைக்காக்கவே.

மாங்குயில் - மாமரத்திலுள்ள குயில். மிழற்றல் - சொல்லல். வானம் மீன்மாதர் அறுவர் - விண்ணிலுள்ள மீன்வடிவினராகிய கார்த்திகைப் பெண்கள் அறுவர். இதைக் கார்த்திகை நாளன்று விண்ணில் திங்களிற் கருகே அறுமீனைகப் பார்க்க. மற்ற நாள்களை யும் அங்ஙனமே அவ்வந்நாள்களில் அதனதன் வடிவத்துடன் பார்த் துணர்க. மருமம் - மார்பு. பொன் வள்ளம் - கொங்கை. அமிழ்து - பால். கமலவீடு - தாமரைவீடு. திசைமுகன் - பிரமன். வெய் துயிர்த்து - பெருமூச்சுவிட்டு. ஓங்கல் - மலை. எயில் - முப்புரவாசி களின் கோட்டை. மூவிழி - திங்கள், ஞாயிறு, எரி (சோமசூர் யாக்நி). சரண்புகல் - அடைக்கலமடைதல். ஓலமிடல் - இடருற்றோர் உதவி விரும்பி இரங்கிக் கூக்குரலிடல். இச்செய்யுள் அறுமுகன் சரவணப்பொய்கையில் தனக்கிருப்பிடமாயமைந்த தாமரையைப் பிரமன் தனக்கிடமாகக் கொண்டமையின் சினந்து சிறையிட்டா னென்னும் நயம்பெறவுளது. இதனால் ஆண்டு இறைவன் இருந் தது தாமரைப் பூவெனக் குறித்தமையும் காண்க.

'அறுமுக வுருவாய்த் தோன்றி யருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளினனே.'

என்பது கந்தபுராணம் திருவவதாரப்படலம். தாமரையை முகமென வும், குவளையைக் கண் எனவும், மாரனை இடையெனவுந் தாங்கும் அமுதை என்க. (எ)

பிரமதேவர்

வேறு

தவளக் குரூஉமணி குயிற்றியொளிர் தமனியத்
தனதுமனை வாயினிறுவுந்
தண்ணிய இதழ்க்கத வடைத்துத் திறக்குந்
தனித்தொழிலை வண்டுமுரலும்
பவளச் சரோருகத் தன்னைதன் னேடுற்
பவித்தபுல வற்குமந்தப்
பண்ணவற் கெதிரான புலவற்கு மாகப்
பணித்தவிறை வன்புரக்க

கவளக் கடாங்கவிழ் கவுட்டுணை நெடுங்கைக்
களிற்றுப் பிடர்த்தலைவருங்
கண்ணா யிரங்கொண்ட விண்ணாடர் கோமகன்
கற்பகச் சோலைவிடபங்
துவளக் குடங்கைத் தலத்தினிற் கோட்டித்
துணைத்தமுலை மாதர்மலர்கொய்
தூமணித் தெற்றிகள் நெருங்கிய குளந்தைவரு
சுந்தரப் பெண்ணமுதையே.

தவளம் - வெண்மை. குரூஉமணி - நிறமணி. குயிற்றி - பதித்து. தமனியம் - பொன். அடைத்து - மூடி. பவளச்சரோருகம் - செந்தாமரை. அன்னை - திரு (இலக்குமி). அன்னை தன்னோடு உற்பவித்த புலவன் - திங்கள். பண்ணைவற்கு எதிரான புலவன் - சூரியன். பணித்த-செய்த. கவளம்-யானை கொள்ளும் ஒருவாயுணவின் பெயர். 'வாங்குங்கவளம்' என்பதாலறிக கடாம் - மதநீர். கவுள்துணை - இருகதுப்பு. கண்ணாயிரங்கொண்ட விண்ணாடர் கோமகன் - இந்திரன். விடபம் - கொம்புகள். கோட்டி - வளைத்து. துணைத்த- இரண்டான. தெற்றிகள் - திண்ணைகள், சித்திரகூடங்கள். (அ)

தேவேந்திரன்
வேறு

அதிருந் தரங்கக் குண்டகழி
அளறு படப்புக் குழக்கிமுழக்
கசனிக் கிகலிக் கலித்துமதத்
தடுக்கல் எடுத்துத் தெறித்துவெகுண்
டெதிருங் குழூஉக்கொள் படைகவல
இடறுங் கறைத்தாட் பரூஉத்தடக்கை
இறைக்குங் கடவெண் களிற்றியானை
யெருத்தத் திவரும் புருகூதன்
முதிருஞ் சுவைத்தெள் ளமிழ்தொழுகு
முழுவெண் ணிறத்து மதிக்குழவி
முருகு விரியுங் கடவுள்நதி
முழுகித் திளைக்குஞ் சடைப்பெருமான்
கதிரும் விழிகள் இருள்சீப்பக்
கங்குற் பொழுதின் ஒருங்கிருந்து
கலவிக் குறிப்பிற் குளநாணுங்
கமலா கரியைப் புரக்கவே.

தரங்கம் - அலை. குண்டு - ஆழம். அளறு - சேறு. பட - ஆக. உழக்கி - கலக்கி. அசனி - இடி. கலித்து - ஒலித்து. அடுக்கல் - மலை. தெறித்து - சிதறி. குழூஉக் கொள்படை - சேனைக் கூட்டம். கவல - வருந்த. கறைத்தாள் - உரல்போலுங்கால். களிற்றியானை, களிறு எனினும் யானை எனினும் ஒரு பொருளாகலின் ஒருபொருள் குறித்த இருமொழி. எருத்தம் - பிடரி. இவரும் - ஏறும். புருகூதன் - இந்திரன் (வேள்வியில் மிக அழைக்கப்படுபவன்). மதிக்குழவி - இளந்திங்கள். கடவுள்நதி - கங்கையாறு. இருள்சீத்தல் - இருளை ஓட்டல். கமலாகரி - அமுதாம்பிகை. கமலம் - நீர். ஆகரம் - உறைவிடம். புரத்தல் - காத்தல். (க)

திருமகள்

கடிப்போ தலர்த்திக் கருஞ்சுரும்பர்
களித்துத் துயில்கூர் கற்பகப்பூங்
கானம் பயிலுங் காமர்நகர்க்
கவலை துரந்தின் அமிழ்தளித்துப்
படிப்பாற் பயிலு மகளிடத்துற்
பவித்துப் புவன மூன்றனையும்
பரிக்குந் திகிரிப் படைப்பாணிப்
பகவன் மருமத் துறைமடந்தை
விடப்பாம் பிரவி வெம்மைமிசை
மேவா வண்ணங் குடைகவிப்ப
விரிக்குங் கதிர்ச்செம் பவளநிற
வேணி யனையாப் புனிற்றுமதி
முடிப்பா லரசு வீற்றிருக்கு
முதல்வன் இடப்பால் இருந்துலக
முழுதும் உயிர்த்த குளந்தைநகர்
மொய்பூங் குழலைப் புரக்கவே.

கடி - மணம். போது - மலர். கருஞ்சுரும்பர் - கருவண்டு. காமர் - அழகு. துரந்து - நீக்கி. பரித்தல் - காத்தல். திகிரி - ஆழி. படை - கருவி. பாணி - கை. பகவன் - திருமால். மருமத் துறை மடந்தை - திரு; மார்பிலுறையும் பெண். இரவி - சூரியன். வேணி - சடை. புனிற்றுமதி - இளந்திங்கள். பூங்குழல் - அமுதாம்பிகை. திகிரிப்படைப் பாணிப்பகவன் மருமத்துறை மடந்தை குழலைப் புரக்க என முடிக்க. (௨

கலைமகள்

வேறு

அளிக்கா தரவுற்றுச் சுவைத்தகள்
அளித்தார் வனசத்துப் பொகுட்டயன்
உளத்தா மரைநச்சத் திளைத்தவன்
உரைப்பால் அருள்பெற்றுத் தரித்தவள்
களத்தால மடக்கிச் சுரர்க்கிடர்
களைத்தேய ஒறுத்துக் கடைக்கணி
குளத்தூர் நயனத்தற் கிடத்தமர்
குளத்தூர் அமுதத்தைப் புரக்கவே

ஆதரவு - விருப்பம். சுவைத்த - சுவைகண்ட. அளித்து - கொடுத்து. ஆர்தல் - தங்குதல். வனசம் - தாமரை. பொகுட்டு- உள்ளிருக்கும் மெல்லிய கொட்டை நச்ச - விரும்ப. திளைத்து - ஆண்டு. உரை - சொல். களம் - கழுத்து. ஆலம் - நஞ்சு. குளத்து ஊர் நயனத்தர் - நெற்றியிற் பொருந்திய கண்ணுடையவர். குளம் - நெற்றி இடம் - இடது பக்கம். (கக)

துர்க்கை அல்லது காளி

வேறு

துளிக்கும் பசுந்தேன் உவட்டெடுத்துச்
சொரியுஞ் செழுந்தா மரைப்பொகுட்டுத்
தோன்றற் பெருமான் முதற்கடவுள்
தொகுதிப் பைங்கூழ் கலைக்கருக்கிக்
களிக்கு மகிடா சுரக்களையைக்
களைந்து சிரமேற் பாசடையிற்
கமலம் எனத்தாள் பதித்திவர்ந்த
கன்னி யெனுந்தெய் வதங்காக்க
பளிக்கு மணிமா டங்கள்தொறும்
பதிந்த தமது சாயலினைப்
பாரா இனமென் றிளஞ்சேய்கள்
பரிந்து பரிந்து வருகவென
விளிக்குங் குளந்தைத் திருநகரின்
வெளிய மதியந் தவழுமுடி
விளங்குங் கதிர்செம் பவளமலை
மீது படர்பைங் கொடியினையே.

உவட்டு எடுத்தல் - பெருக்கெடுத்தல். சொரிதல் - சிந்துதல். செழுந்தாமரை - வளப்பமுள்ள தாமரை. பெருமான் - பிரமன். தொகுதி - கூட்டம். பைங்கூழ் - பசியபயிர். மகிடம் - எருமைக் கடா. மகிடாசூரன் - எருமைக்கடா வடிவனான ஓர் அசுரன். பிரமன் முதலிய கடவுளர்களை, மிக வருத்தினவனாகலின் அவர்களைப் பயிர்களாகவும் அவனைக் களையாகவுங் கூறினார். பாசடை - பச்சை யிலை. கன்னி - துர்க்கை. பளிக்குமணி - பளிங்குக்கல். சாயல் - நிழல். பாரா - பார்த்து. செய்யா என்னும் வினை ஆகலின் இறந்த காலமாயிற்று. சேய்கள் - பிள்ளைகள். பரிந்து - விரும்பி. விளித்தல்-அழைத்தல். பவளமாலை - சிவபெருமான். பைங்கொடி - பசிய கொடிபோலும் அமுதாம்பிகை. பவளமலை என்றது, சிவபெருமானை.

சத்தமாதர்

வேறு

இலகொளி உமிழ்தரு சிறையோ திமத்தவள்
எழிலுறு தவளவல் விடையூர் திறத்தவள்
எறழ்வலி மயில்கட வினள்வேல் சிரிப்பவள்
இருசிறை ஒருகலு ழனையேறி நிற்பவள்
உலகதிர் தரவரும் அரியே றுகைப்பவள்
உமிழ்கட மழைபொழி அயிரா வதத்தவள்
உழிதரு குழிவிழி உடல்பேய் நடத்துநள்
உவரெழு மகளிர்தம் ஒளிர்தாள் பழிச்சுதும்
அலகைகள் நடமிடும் அழலார் களத்தினில்
அமரர்கள் தபுமுடல் கழிபா ணிறக்கலன்
அரவொடு திணிவரை நிகர்தோ ளிடைப்பொலி
அணியென அணிதரு பெருமான் இடத்தமர்
நிலவிரி நகையவள் இருமூ வகைப்படு
நெறிகளு நிறுவிய ஒருமா தவக்கொடி
நிலமிசை உயரிய கமலா கரத்துறை
நிருமலி மலைமகள் தனையே புரக்கவே.

ஒளி உமிழ்தரல் - ஒளிவீசுதல். ஓதிமத்தவள் - கலைமகள், அபிராமி. தவளம் - வெண்மை. விடை - எருது. எறழ்வலி - மிக்க வலி. கலுழன் - கருடன். அரியேறு - ஆண்சிங்கம். உமிழ்தல் - சிந்துதல். கடம் - மதம். விடையூர் திறத்தவள் - மகேசுவரி. வேல் சிரிப்பவள் - கௌமாரி. கலுழனை ஏறிநிற்பவள் - வராகி. அயிரா வதத்தவள் - இந்திராணி. பேய் நடத்துநள் - காளி ஆகிய இவர்களை

உவரெழுமகளிர் தம் ஒளிர்தாள் பரிச்சுதும் என உகரச் சுட்டு தந்து கூறினார். உழிதரல் - சுற்றுதல். அழலார் களம் - சர்வசங்கார எரியார்ந்த இடம். தபுதல் - இறத்தல். பால் நிறக்கலன் - என்பு மாலையாகிய அணி. நில - குளிர்ந்த வெள்ளொளி. 'குறியதன் கீழாக் குறுகலும்' என்றதால் நிலா என்பது நிலவெனக் குறுகிற்று. இருமூவகைப் படுநெறி - அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய அறுவகைச்சமயங்கள். இச்சமயங்களைச் சிவஞானசித்தியார் சுபக்கத்திற் காண்க. (கங)

முப்பத்துமுக்கோடிதேவர்

வேறு

சிறகரளி மொய்த்திதழ் கொழுதிமது வைப்பசி
சிதைய மடுத்துக் களித்தாடு தேமலர்
பெருகுமள கக்கன மதர்நெடுவி ழிக்கடல்
சிறிது குடித்துக் கறுத்தார மேவிய
திணிமுலைம லைச்சொரி திதலைநிதி யத்திரள்
செழுவிய பொற்புக் கடற்பாய ஆறெழில்
செறிதரும டித்திரை இடையறலொ ழுக்கிய
திறமை நிகர்த்தொத் தொழுக்காமு ரோமமுங்
குறைவற அளித்தருள் குவலயம டக்கொடி
குளிர்கெட நச்சிக் கறைப்போர்வை யாலுடல்
கொளுவியதெ னத்திசை முழுவது மடக்கிய
குமரி யிருட்டைப் படச்சாடு மாதவர்
குலவுகிர ணச்சுவை உணவினையு ணத்தனி
குறுகிய பொற்சக் கரச்சேவல் போலொளிர்
குருமணுகு யிற்றிய புயமலைகு ழைக்கெதிர்
குயமுடி யைச்சற் றெடுத்தேறு பார்வையும்
வெறிகமழும் உற்பல நறுமலர்ம றைப்பினில்
விழைத னலத்தைப் படித்தேக நீள்செவி
வியனிலமி றுத்தமை யெணிமறமி குத்தவை
வெருவி விழச்செற் றுகைத்தோடி நீடிய
விரிமலர்த மக்கொரு மறைவிடமெ னப்படும்
விதியென் எனப்புக்கு விற்காதி னேடமர்
வினையிலிக ரத்துழை சடைவனமு றற்கெழ
விரைவில் விளைத்துக் குதித்தாடு பார்வையும்

இறைமையும எப்பரும் அழகொளிர நிற்பவள்
இமய மலைக்கட் கொடிப்போல மேவிய
இனியமட மைக்குயில் மரகதம யிற்பெடை
இரையும் இருக்குக் குளத்தூரில் நாடியென்
இருமைவினை முற்றற எனையுமடி மைக்கொளும்
எழிலமிழ் தச்சத்தி வைப்பான காவலர்
எரிகதிரு ருத்திரர் விறல்வசும ருத்துவர்
எனுமிவர் முப்பத்து முக்கோடி தேவரே.

சிறகர் - இறகு (போலி). சொழுதி - கோதி. சிதைதல்-கெடுதல். மடுத்தல் - குடித்தல். அளகக்கனம் - கூந்தலாகிய மேகம். ஆரம் - மாலை. திணி - பருத்த. திதலை - தேமல் பொற்புக் கடல் - அழகாகிய கடல் மடி - வயிறு. திரை - அலை. அறல் - கருமணல். திறமை - செய்வகை. உரோமம் - மயிர். குவலயம் மடக்கொடி - பூமகள். நச்சி - விரும்பி கறை - கருமை. கொளுவியது - பொருந்தினது. குமரியிருட்டு - விடியற்காலத்துக்கு முன் இருள். சாடுதல் - ஒழித்தல். குயிற்றுதல் - பதித்தல். குயம்-கொங்கை சற்றெடுத்தேறு பார்வை என்றது கொங்கையின் பெருமிதத்தை. வெறி-மணம். விழைதல் - விரும்பல். தன்நலம் - தன்னுடைய நன்மை. தன் என்றது, கண்ணை. வியன் நிலம் - பரந்த இடம். இறுத்தமை - தங்கினமை. மறம் - சினம். அவை - அவ்வுற்பலமலரைச சுட்டிற்று. செற்று உதைத்தல்-கெடுத்துத் தள்ளுதல். மறைவிடம்-ஒளிப்பிடம். வினையிலி - சிவபெருமான். 'வினையி னீங்கி விளங்கிய முனைவன்' என்பதாலறிக உழை - மான். சடைவனம்-சடைக்காடு. இறைமை-தலைமை, முதன்மை. மடமைக்குயில் - இளங்குயில். இருக்கு - மறை. அமிழ்தச் சத்தி - அமுதாம்பிகை. வைப்பு - புதைபொருள். எரிகதிர் - சூரியர். சூரியர் பன்னிருவர்: உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர், ஆக முப்பத்து மூவர் என்றறிக. இச்செய்யுள் கூந்தலான மேகமானது கண்ணாகிய கடலைக் குடித்துக் கறுத்துக் கொங்கையாகிய மலையிற் சொரிந்த தேமலாகிய புதைபொருள் அழகாகிய கடலிற்பாய, அக்கடலிலுள்ள வயிற்று மடிப்பான அலையில் கருமணலை யொதுக்கிய விதத்தை யொத்திருக்கின்ற மயிர் ஒழுங்கும், பூமகள் கரிய போர்வையால் உடம்பை மூடினதுபோல் மூடிய (புற) இருளை யொழிக்கும் சூரிய கிரணத்தை உண்ண நெருங்கின சக்கரவாகப் பறவைபோல மணிக் குழைக் கெதிரே தலையெடுத்துப் பெருமிதத்தோடு இருக்கும் கொங்கையி ணேக்கமும், தமக்குப் பகையாகிய குவளைப் பூக்கள் தம்முடைய நலத்தைப் படித்துச் செல்லுமாறு காதினிடத்துத் தங்கியிருந்தமை யெண்ணிச் சினமிகுந்து அவைகள் விழும்படி கெடுத்துத்

தள்ளி அப்பூக்களுக்கு மறைவிடமெனப்படும் நிலைமை என்னென்று காதுடன் போர் செய்து விளையாடுகின்ற பார்வையும் முதன்மையும் அழகொளிர நிற்பவளெனக் கூட்டிச் சொல்லுக. (கச)

உ. செங்கீரைப்பருவம்

இஃது ஐந்தாமாதத்தில் நிகழ்வது கூறுவது. இதைக் குழவி தலையெடுத்து முகமசைந்தாடும் பருவம் என்பார் சிலர். சிலர் செவ்விய சொற்களைப் பேசும் பருவம் என்பர். இதன் உண்மை யாதெனில், ...

"ஈனமக லனையதா மரைபதித் தொருதா
ளிருத்தியொரு தாளெடுத்தே
யெழில்நனி கனிந்தமுக தாமரை மலர்ந்தசைய
இருமணிக் குழைவில்வீசத்
தேன்மலர் தருங்குதலை சீர்ப்பமங் களவல்லி
செங்கீரை யாடியருளே."

என மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் உள்ளதால் ஒரு காலை முடக்கி ஒரு காலை நிமிர்த்து இரண்டு திருக்கைகளையும் நிலத்திலூன்றி முகத்தைமேம் நிமிர்த்தாடுதல் இப்பருவத்தின் செய்கை. அது போது தாதியர்கள் செவ்விய சொற்களைச் சொல்லவேண்டுமென வேண்டிக் கொள்வதாகக் கூறவேண்டும் என்பது கருத்து. கீர் - சொல்.

பொருவரிய அண்டப் பரப்பைமுழு தாளும்
புராதனர் முகத்து விழியாப்
போந்தலவு நங்கொழுநர் தம்மைத் தடுத்திடர்
புரிந்தகைக் கமலநமையும்
பருவரல் உறுத்துமென் றஞ்சிமென் குமுதமும்
பங்கயமும் ஒன்றையொன்று
பாதுகாப் பத்துயிலும் என்றர மடந்தையர்
பரிந்துகொண் டாடுசீர்த்தி
இருகைமல ரும்புவி பதித்தொரு முழந்தாள்
இருத்தியொரு தாள்மேனிமிர்த்
திந்த்ரதிரு விற்கிடை தொடுத்தவெண் தரளநிரை
ஏய்ப்பநுதல் வேர்பொடிப்பத்

திருமுக நிமிர்த்தொரு குளந்தையமு தாம்பிகை
செங்கீரை யாடியருளே
சிற்சபையில் நெற்றிவிழி அற்புதனை ஆட்டுமயில்
செங்கீரை ஆடியருளே.

புராதனர் - பழமையரான இறைவர். கொழுநர் - சூரியன், திங்கள் (விழிகள் சோமசூரியர்களாகலின்). இடர் - துன்பம். அது திருக்கண் புதைத்தமைபாலுண்டாயது. நமை என்பது நம்மை என்பதன் குறை. பருவரல் உறுத்தும் - துன்பப்படுத்தும். அஞ்சி - பயந்து. பாதுகாத்தல் - காவலுடன் காத்தல். ஒன்றையொன்று பாதுகாப்பத் துயிலலாவது ஒன்று குவியுங்கால் ஒன்று மலர்தல். அது பகலில் தாமரை மலர்ந்திருக்கக் குமுதம் குவிதல். இரவில் குமுதம் மலர்ந்திருக்கத் தாமரைகுவிதல். ஒன்று குவியுங்கால் ஒன்று மலர்தல் காத்தல்போலாமெனக் கொள்க. அரமடைந்தையர் - விண்மகளிர். பரிந்து - அன்புபெற்று. தரளம் - முத்து. எய்ப்ப - ஒப்ப. பொடித்தல் - சிந்தல். சிற்சபையினெற்றிவிழி யற்புதனை யாட்டு மயில் என்றது உயிர்களின் இருள் மலம் நீங்குதற் பொருட்டு இறைவன் திருக்கூத்தைக் காணுவது முறைமையாதலினாலும், அவள் காணுமாறு இறைவன் திருக்கூத்தாடுந் தன்மையினாலும், அங்ஙனமாதல்,

—'பரையிடமாக்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு.'

என உண்மை விளக்கம் கூறுவதாலும் ஆட்டுமயில் என்றார் என்க.

பொங்கரி பரந்தசிறை வண்டினம் விருந்துணப்
பூங்கமல நாள்முகையெலாம்
போதாக எழுபரித் தேர்கடாய்க் கடல்முகடு
பூப்பவரு பரிதிப்பிரான்
சங்கினம் உயிர்த்தவெண் தரளவட மணியுமித்
தாமரை முகிழ்த்துணையும்யான்
தண்டாத மெல்லிதழ் முறுக்குடைத் தல்லாது
தணவலென் றருகுபோந்து
வெங்கதிர்க் கற்றைகள் பரப்பியுல வுதலேய்ப்ப
மின்னுமகரக்குழைகதிர்
வீங்கிள முலைத்தலை உமிழ்ந்துதண் புயமீது
விளையாடி நிற்பவதனத்

திங்கள்மிசை ஆடக் குளந்தையமு தாம்பிகை
செங்கீரை ஆடியருளே
சிற்சபையில் நெற்றிவிழி அற்புதனை ஆட்டுமயில்
செங்கீரை ஆடியருளே.

அரி - வரி. சிறை - இறகு. இனம் - கூட்டம். முகை - அரும்பு. போதர்க - மலர. கடாய் - கடவியென் மரூஉ. தாமரைமுகை மலர்தல் சூரியன் வருகையால் என்பார, 'முகையெலாம் போதாக வருபரிதிப் பிரான்' என்றதறிக. தாமரை முகிழ்த்துணை என்றது கொங்கைகளாகிய இரண்டு தாமரை யரும்புகளை. அவை முத்துமாலை யணிந்துள்ளமையைக் குறிப்பிப்பார், 'சங்கின முயிர்த்த வெண்டரள வடமணியு மித்தாமரை முகிழ்த்துணையும்' என்றார் என்க. தண்டாத - நீங்காத. தணவல் - நீங்கேன். கற்றைகள் - கூட்டங்கள். மகரக் குழை - மகரவடிவமாய்ச் செய்யப்பட்ட காதணி. பரிதிப்பிரான் அருகுபோந்து வெங்கதிர்க் கற்றைகள் பரப்பி யுலவுத லேய்ப்ப மகரக்குழை இளமுலைத்தலைக் கதிருமிழ்ந்து விளையாடி நிற்ப எனக் கூட்டுக. சூரியன் ஒருவனும், மகரக்குழை இரண்டுமா மாற்றை யுணர்க. (கசு)

கார்பூத்த மறுவுண்ட வெண்கதிர்க் கலைமதி
கவின்றநின் கமலவதனம்
காண்தோறு மறுவற்ற மதியீ தெனவுட்
கவன்றுமுன் னிற்கவஞ்சிப்
பார்பூத்த தென்குளத் தூர்ப்பொங்கர் காவணம்
பரியமதில் நாறையூடு
பையென நுழைந்தொளித் தோடநிற பணியவரு
பங்கயச் செல்விமுதலோர்
ஏர்பூத்த அங்கையர விந்தமலர் கூம்பவவர்
இணைவிழிக் குவளையெல்லாம்
இரும்புனல் தேக்துளி பொடித்துமிழ்ந் தலரவருள்
எனுமமிழ்த தாரைகான்று
சீர்பூத்த முகமதியம் ஆடவமு தாம்பிகை
செங்கீரை ஆடியருளே
சிற்சபையில் நெற்றிவிழி அற்புதனை ஆட்டுமயில்
செங்கீரை ஆடியருளே.

கார் - கருமை. மறு - களங்கம். உண்ணல் - கொள்ளல். வெண்கதிர் - வெள்ளிய ஒளித்தொகுதி. கவின்ற - அழகு செய்த. உள் -

மனம். கவன்று - கவலையுற்று. பொங்கர் - சோலை காவணம் - பந்தல் நூழை - இட்டு; (சிறு) வாயில். பையென மெதுவாக. பங்கயச் செல்வி முதலோர் - திருமகள் முதலாயினர். மறுவுண்ட மதிமறுவற்ற நின் வதனங் காண்டோறும் உன் முன்னிற்க வஞ்சிக் காவணத்தி னுழைந்தோடவும், செல்வி முதலோர்கை அரவிந்தங் கூம்பவும், அலரவும், முகமதியமாடச் செங்கீரையாடி யருள் என இயைக்க. (கள)

மணிதுற்ற தவிசெனப் பருமணிப் பருமம்
வயங்குமடி மீதிருத்தி
மதிக்கடவுள் தன்மனை யெனக்குலாய்த் தன்னமிழ்தம்
வாக்குவ தெனத்தீம்பயம்
பணிலத்தின் வாய்க்குமுதம் ஊட்டிமற் றிதுமாசு
பரியாது சாலாதெனப்
பாரிழைத் தொருபொட்டு நுதல்மதிக் கிட்டுப்
பசுங்கழையின் மஞ்ஞைநின்றுங்
கணிபெற்ற புயமேல் அணைத்திரு மதித்தேவர்
அளவளாய்க் குழீஇயதேய்ப்ப
அழகிய முகத்துமுத் தாடியெழில் மேனைசீ
ராட்டமகிழ் கூர்ந்துகொடியேம்
திணிவைத்த நெஞ்சங் கரைக்குமமு தாம்பிகை
செங்கீரை ஆடியருளே
சிற்சபையில் நெற்றிவிழி அற்புதனை ஆட்டுமயில்
செங்கீரை ஆடியருளே.

துறுதல் - நெருங்குதல். தவிசு - ஆசனம். பருமம் - பதினொன்கு கோவை மணிவடம். இது திருவிளையாடற்புராணந் தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலத்தில் 'ஈரேழ் பருமம்' என்று கருஅ-வது செய்யுளில் உள்ளதைக் காண்க. திவாகரனுர் இதைப் பதினெண்கோவை மணியென்பர். 'மேகலை காஞ்சி கலாபம் பருமம், விரிசிகை யேழுமோ ரெட்டு மீரெட்டு, மூவாறுநாலெட்டு முறைக்கோவை மணியே' என்பது சூத்திரம். மனை - மனைவி. குலாய் - கொண்டாடி. வாக்குவது - வார்த்தல். தீம்பயம் - இனிப் புள்ளபால். பணிலம - சங்கு. வாய்க்குமுதம் - வாயாகிய குமுதம். மாசு - களங்கம். பரியாது - நீங்காது. சாலாது - ஒவ்வாது. பாரிழைத்து ஒரு பொட்டு நுதல் மதிக்கு இட்டு என்பது, நிலத்தில் நீரிட்டுத் தேய்த்து வழித்து அம்மண்ணைப் பொட்டாக நெற்றியி லிடல். அவ்வாறிடல் உலக வழக்கு. 'வீறு பூரண நிலப்பொட்டு

மிட்டு என்பதாலு மறிக. கழை - மூங்கில். பசுங்கழையின் மஞ்ஞை நின் றங்கணி பெற்றபுயமேல் அணைத்தென்பது மேனையின் தோள்மூங்கில் போன்றதும் அமுதாம்பிகை மயில்போன்றவளும் எனுமயந் தோன்ற உரைத்தமை எனக் கொள்க. இருமதித்தேவர் மேனை முகமும் அம்மை முகமும் ஒன்றயிணைத்து முத்தமிட்டதைக் குறித்தது. மேனை - மலையரையன் மனைவி. (க௮)

முக்கனி செறித்தநறு நீர்ப்பந்தர் முல்லைவெண்
முகையனைய மூரலறுகால்
மூசிய இளம்பொங்கர் தேசுறு மலர்ப்பொய்கை
முதலான அறம்யாவையும்
தொக்கமறை யாகம விதிப்படி யியற்றுநாள்
தோலாத கருணை கூர்ந்து
துண்ணென எழுந்தருள் திருச்சோம நாதனார்
தூமேனி குழைவித்தவை
இக்கரமும் இக்கரமும் இத்தனமும் இத்தனமும்
என்றுயிர்த் தோழியர்களாய்
ஏத்துமட மாதரார் தம்மைத் தெளித்திடுவ
தேய்ப்பமுக மதியமசையத்
திக்கெட்டும் ஏத்துங் குளந்தையமு தாம்பிகை
செங்கீரை ஆடியருளே
சிற்சபையில் நெற்றிவிழி அற்புதனை ஆட்டுமயில்
செங்கீரை ஆடியருளே.

முக்கனி - வாழைக்கனி, மாங்கனி பலாக்கனி. மூரல்-சோறு. அறுகால் - வண்டு. அறம்யாவையும் என்றது, அது முப்பத்திரண்டு என்பதை இதன் விரிவைக் காஞ்சிப்புராணம் தழுவக் குழைந்த படலத்திற் காண்க. இயற்றுநாள் - செய்யுநாளில் (செய்தது காஞ்சியில்) தெளித்திடுவது - தெளிவிப்பது. ஏய்ப்ப - ஒப்ப. (க௯)

வேறு

பொங்கெழில் நின்முகம் ஆடுதொ றுங்கமழ்
போதரி நீள்விழிகள்
பொற்செவி யிற்பல காலுமெ திர்ந்து
புகுந்து மறிந்தவைச்
செங்கதிர் நீள்குழை தம்மொடு தாமெதிர்
சென்று மணிக்கலொடும்

செயிரறு பொன்னின் அரும்பு பிதிர்ந்து
தெறித்திட மோதுதிறம்
தங்கிளை சார்ந்திடை யாவகை சாற்றமொய்
தாம அயிற்படையால்
தண்குரு தித்துளி வீழ்தர வீரர்கள்
தம்மொடு தாமெதிரா
அங்கை கலந்தமர் ஆடுதல் ஆமென
ஆடுக செங்கீரை
அளந்தறி யாத குளந்தை நிலாவமு
தாடுக செங்கீரை

மறிந்து - திரும்பி. செயிர் - குற்றம். பிதிர்ந்து - உதிர்ந்து. தெளித்திட - சிதற. இடையா வகை - பின்னிடையா விதம். மொய்த்தல் - நெருங்குதல் தாமம் - மாலை. அயில் - வேல். குருதித்துளி - இரத்தத்துளி. ஆம் - ஒக்கும். வேல் கண்ணிற்கும், குருதித்துளி மணிக்கல் பொன்னரும்பிற்கும், குழைகள் வீரர்கட்கு முவமமாம். (௨0)

பல்லுயி ருங்களி கூர்கரு ணைக்கடல்
பம்பிவ ளைந்ததெனப்
பாலொளி கான்ற நறும்புனல் சூழ்ந்து
பரந்தொளிர் கம்பையிடை
வில்லுமிழ் மின்னுரு வச்சுடர் வேணிவிண்
ணேணைவ டந்தழுவி
வீங்கிள வெம்முலை மார்புழ அங்கையின்
மேதகு தோள்குழையப்
புல்லி அணைப்பது போல்வயி ரங்கள்
பொதிந்தவிர் தொட்டிலினிற்
பொன்னணி பாவையொ டாடி அணைத்துப்
பொழுதுக ழித்தருளும்
அல்லிம லர்க்குழல் வல்லி பராபரை
ஆடுக செங்கீரை
அளந்தறி யாத குளந்தை நிலாவமு
தாடுக செங்கீரை.

பம்பி - பரவி. கான்றல் - கக்கல். கம்பை - கம்பா நதி. வில் - ஒளி. உமிழ் - சிந்துகின்ற. வடம் - மணிவடம். மார்பு உழ -

மார்பில் உழுதல் செய்ய. அங்கை - அகங்கை. அவிர்தல் - விளங்கல். பொழுது கழித்தருளும் - காலங்கழிக்கும். அல்லி - உள்ளிதழ். சம்பையாற்றிற்கு வயிரத் தொட்டிலையும், வேணி விண்ணோனுக்குப் பொன்னணி பாவையையும் ஒப்புமையாகக் கொள்க. (௨௧)

குலத்தில் வளர்த்திடும் அன்னையர் செந்துகில்
கூர்மடி மீதிமயக்
குன்றி னரக்கலர் வாழ்க்கை யெனக்களி
கொண்டு குலாவியவர்
கலைப்பொலி முகமதி யுங்குழல் முகிலும்
கண்டென வாய்க்குமுதம்
கதிர்த்த நகைத்தள வலர வரும்பக்
கைக்கம லங்குவியா
முலைக்கம லச்செழு முகையொடு நட்பு
முயங்கிட ஆடலுறும்
மூரிவ ளத்துத ரத்திரு வாலெழில்
மொய்த்து மிகத்தழைய
அலக்க ணறச்சுவை யாரமிழ் துண்பவள்
ஆடுக செங்கீரை
அளந்தறி யாத குளந்தை நிலாவமு
தாடுக செங்கீரை.

குலத்தில் - நற்குலத்தில். மடிமீது - மடியின்மேல். இமயக் குன்று - பனிமலை அரக்கு - செந்நிறம். அலர் - மலர். அரக்கலர் வாழ்க்கை - செந்தாமரையில் வாழ்ந்திருத்தல். அவர் - அவ்வன்னையர். நகைத்தளவு - பல்லாகிய முல்லை. அரும்ப - அரும்பும்படி. குவியா - குவித்து. முலை - அன்னையாமுலை. கையைக் குவித்து அன்னையர் முலைமேல் வைத்து என்பதை விளக்க 'கைக்கமலங் குவியா முலைகமலச் செழுமுகையோடு நட்பு முயங்கிட' எனக் கூறினார். முயங்கல் - தழுவுதல். ஆடல் - வருந்துதல். மூரி - பெரிய. உதரம் - வயிறு திரு - அழகு. ஆல் - ஆலிலை. அலக்கண் - துன்பம். அமிழ்து - முலைப்பால் என்க. மடிமீது குலாவி அலர, அரும்ப, கைக்கமலங் குவியா, நட்பு முயங்கிட, ஆல் மிகத் தழைய உண்பவளெனக் கூட்டுக. (உஉ)

வேறு

வானம் எழுங்கரு மேக இனங்கள்
வறந்தீ ரம்போய்வன்

மால்வரை எங்கணும் ஓடிட வென்றிமிர்
வண்டே தும்போதா
நான முயங்கிய வாச நறுங்குழல்
நந்தா வந்தீப
நாவில் எழுந்தொளிர் தூம ஒழுங்கென
நன்றூர் மென்சாயல்
மேனி நிறந்தரு மேனை அணங்கு
விழைந்தார் வங்கூர
மீறி வளர்ந்தழ கான குளந்தை
விளங்கா நின்றாறு
தேனிறை கொன்றையி னோனிட நின்றவள்
செங்கோ செங்கீரை
தேவர் தொழுங்கவி யாண சௌந்தரி
செங்கோ செங்கீரை.

இனங்கள் - குலங்கள். வறந்து - வற்றி. மால் - பெருமை. இமிர்தல் - ஒலித்தல். நானம் - மான்மதம். முயங்கிய - தழுவிய. நந்தாமை - கெடாமை. தூமம் - புகை சாயல் - அழகு. மேனி - வடிவம் நிறம் - ஒளி. வண்டேதும்போதா நானமுயங்கிய் குழலானது தீபநாவில் எழுந்தொளிர் தூமவொழுங்கென மேனிநிறந்தரு மேனையணங்கு என இயைக்க. ஆர்வங்கூரல் - விரும்பல். கொன்றையினோன் - சிவபெருமான். இடம் நின்றவள் - இடப்பாகத்தில் நின்றவள், அமுதாம்பிகை. செங்கீரை செங்கீரை என அடுக்கப் படுவது செங்கோ செங்கீரை என்றாயிற்றென்பர். (உரு)

கோல நெடும்பனி மாவிம யம்பயில்
கொம்பே செம்பாத
கோகன கந்தொழ வாருள நின்ற
கொழுந்தே பைந்தேனே
ஞால மளந்தவன் நாடும் அரும்பெறல்
நங்காய் வெங்கோப
நாம விடஞ்செறி காமரு கண்டர்தம்
நண்பே தண்போதோ
டேல மளைந்திருள் கூரு நறுங்குழல்
எந்தா யெம்பாசம்
ஈறு படும்படி ஞான மணங்கமழ்
இன்பே அன்பாளர்

சீல மிகுங்கம லாகரம் வந்தவள்
செங்கோ செங்கீரை
தேவர் தொழுங்கலி யாண சௌந்தரி
செங்கோ செங்கீரை.

கோலம் - அழகு. மால் - பெருமை. இமயம் - பனிமலை. பயிலல் - வாழ்தல். செம்பாத கோகனதம் - செந்தாமரைப்பாதம். ஞாலம் - பூமி. நங்காய் - பெண்ணிற் சிறந்தவளே. வெங்கோபம் - கொடிய சினம். நாமம் - அச்சம். விடம் - நஞ்சு. செறிதல் - இருத்தல் மேற்று. காமரு - அழகிய. நண்பே - நட்பினளே. ஏலம் - மயிர்ச் சாந்து. அளைதல் - பூசுதல். இருள்கூர் - மிக்க கருமையுள்ள. ஈறு - முடிவு. சீலம் - உயர் வொழுக்கம். (உச)

ங. தாலப்பருவம்

இஃது எழாந்திங்களில் நிகழ்வதாகக் கூறுவது. இது பிள்ளையைத் தொட்டிலிலிட்டு மகளிர் நாவினாற்பாடும் பாடல்களுடன் தொட்டிலாட்டும் பருவமென்றறிக. தால் - நா. தாலாட்டும் பருவத்தையே தாலப்பருவமென்று கூறுதல் பண்டையோர் வழக்கு.

மதுரங் கொழிக்கும் கொழுந்தேறல்
மடுத்துச் சுரும்பர் அடைகிடக்கும்
மலர்ப்பூந் தடத்தைக் காண்டலுஞ்செம்
மணிகால் குடுமிப் பணியுலகம்
இதுவு மரவந் தனக்கிடமா
யிருக்குங் கொல்லோ மென்றழுக்கா
றெய்தித் தன்கீழ்ப் படத்தாழ்த்தும்
இயல்பை அறிந்தா லெனக்கரைக்கட்
பொதுளி உறவு கொண்டநறும்
பொதும்பர் நாக ருலகெனுமொப்
புமையாற் புலவோர் பதிதாழ்த்திப்
பொற்று துதிர்க்குந் திருக்குளந்தைப்
பதியின் மகிழு நறியசுவைப்
பாகே தாலோ தாலேலோ
பணிலம் உயிர்த்த தரளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ.

மதுரம் - சுவை. தேறல் - தேன். மடுத்து - உண்டு. அடை கிடத்தல் - நீங்காதிருத்தல் (குஞ்சுபொரிக்க முட்டையின்மேலிருத் தல்). குடுமி - உச்சி. பணியுலகம் - பாம்புலகம். இதுவும் என்றது இத்தடாகமுமென நின்றது. அழுக்காறு - பொறாமை. தன் கீழ்ப் படத் தாழ்த்தும் இயல்லை யறிந்தாலென என்பதை (பாம்புலக மானது அத்தடாகத்தை) தனக்குக் கீழாகத் தாழும்படி செய்யும் தன்மையை யுணர்ந்தாற்போல எனக்கொள்க இதனால் தடாகத்தி னாழமானது நாகருலகத்திற்குங் கீழாக இருக்கிறதென்பது உணர்க. கரைக்கண் - அத்தடாகக் கரையில். பொதுளுதல் - நெருங்கல். உறவுகொண்ட - நட்புக்கொண்ட. நறும்பொதும்பர் - நல்ல சோலை. பாவாய் - ஓவியம்போலும் பெண்ணே கரைக்கட் பொதுளி யுறவு கொண்ட நறும்பொதும்பர் நாகர் உலகம் என்கிற பெயர் ஒப்புமை யால் தேவர்கள் பதியைத்தாழச் செய்து மஞ்சள் நிறமுள்ள மலர்ப் பொடியை யுதிர்க்கும் எனப் பொருந்துக. இதனால் சோலை தேவர் உலகத்திற்கும் உயர்ந்திருக்கிறதென்பது கருத்தாகக் கொள்க.(உ௫)

இருள்கால் சீத்துச் சோதிவெயில்
　　எறிக்குஞ் செக்கர் மணித்தொகையின்
　இழைக்கும் பசும்பொன் தலத்துயர்த்த
　　இருங்கே தனத்தின் மிசையுயிர்கட்
கருள்கால் கலைவெண் முழுமதியம்
　　அமரும் பரிசு தழல்நாப்பண்
　அமைத்த தூணத் தருந்தவஞ்செய்
　　அறவோர் கடுக்கு மேல்நிலத்துச்
சுருள்கால் மலர்ப்பூங் கூந்தலிளந்
　　தோகை அனையார்க் கெதிர்நடிக்கும்
　சுரமா மகளிர் விழித்தொழிற்குத்
　　தோற்றுச் சமழ்க்குந் திருக்குளந்தைப்
பருகா அமிழ்தே பெருங்கருணைப்
　　பரையே தாலோ தாலேலோ
　பணிலம் உயிர்த்த தரளநகைப்
　　பாவாய் தாலோ தாலேலோ.

கால் சீத்து - துடைத்து. சோதி வெயில் - மிக்க வெயில். எறித்தல் - காய்தல். செக்கர் மணி - செம்மணி. இழைத்தல் - செய்தல். உயர்த்தல் - உயர வெடுத்துக் கட்டல். இருகேதனம் - பெரிய கொடி. பரிசு - தன்மை. நாப்பண் - நடு. கடுக்கும் - ஒக்கும். பொற்றலத்தில் உயர்த்தின கொடியில் மதி யமருந்தன்மை எரியின்

நடுவில் நாட்டி வைத்த தூணின்மேலிருந்து உடல் முழுதும் நீறணிந்து தவஞ்செய்வோரை யொக்குமென்க. மேனிலம் - மேமாடநிலம். கால் - விரிதல். விழித்தொழில் - கண்களின் தொழில் (கண்கள் இமைத்துச் சுழலல்). தோற்று - தோல்விபடைந்து. சமழ்த்தல் - நாணுதல். இமையாநாட்டங்களை யுடையவர்களாதலான் அவர்களுக்குக் கண் இமைத்துச் சுழலல் இல்லை யென்றுணர்க. (உக)

மணங்கேழ் வனசம் ஊற்றெடுத்து
மதுவார் பொகுட்டிச் சுறுச்சுமந்து
வயிறு வருந்திக் கருவுயிர்க்க
வயின்பார்த் துழலும் பெடைஞெண்டைக்
கணங்கே ழயின்முள் தாட்படுத்துக்
கவைத்தாள் இடையற் றலையூடு
கருவண் டினங்கள் புடைசூழக்
கலந்து முரலத் துவக்குண்டு
சுணங்கேர் முலைப்பெண் அணங்குநினைச்
சுமந்து மகளிர் தாலெடுப்பத்
துயிலு மணித்தொட் டிலைக்காட்டுந்
தொடுநீர் வாவித் திருக்குளந்தைப்
பணங்கேழ் அரவப் பேரல்குற்
பவையே தாலோ தாலேலோ
பணிலம் உயிர்த்த தரளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ.

கேழ்வனசம் - செந்தாமரை. சுறு - சுறு மீன்கள். கருவுயிர்த்தல் - பிள்ளை பெறுதல். வயின் - இடம். பெடைஞெண்டு - பெண் நண்டு. கணம் - திரட்சி. கேழ் - நிறம். அயில் - கூர்மை. முள்தாட்படுத்துதல் - முள்ளுடைய தண்டாகிய தாளினுல் (கொடியினுல்) அகப்படச்செய்தல். கவை - பிளவு. வனசம் முட்டாட்படுத்துப் (பெடை ஞெண்டின்) கவைத்தாளிடையற்று எனக்கூட்டுக. அலையூடு - திரைகளினூடே. முரல - ஒலிக்க. துவக்குண்டு - பிணிப்புண்டு (கட்டுண்டு). சுணங்கு - தேமல். தொடுதல் - தோண்டுதல். வாவி - குளம். தாலெடுத்தல் - நாவாற்பாட்டை யெடுத்துப் பாடல். தாமரையானது தன்பொகுட்டில் சுறுமீனைச் சுமந்து நண்டின் பிளவுபட்ட கால்களால் தண்டு வெட்டப்பட்டு அலையூடு அசைந்து வண்டுகள் ஒலிக்க நின்னைச் சுமந்து மகளிர் தாலாட்டத் துயிலுந் தொட்டிலைக் காட்டுமென இயைக்க. (உஎ)

கந்தங் கமழு நறுங்களபக்
கலவை அளைந்த முலைக்குவடாம்
கரடக் களிற்றின் மருப்பினிடைக்
கவின்ற உரோமப் புழைக்கரத்தால்
நொந்தங் கலமந் திறுங்கொடிபோல்
நுணுகித் துவளுஞ் சிற்றிடையார்
நுவலுங் கிளவிக் கிடைந்தகுயில்
நுவலா தடங்கி அவ்விசையின்
சந்தம் பலநா ளகம்பயிலத்
தழுவிச் சிலநாள் வாய்விண்டு
சாற்றி ஒப்பு நோக்கி ஒவ்வாத்
தவறுற் பின்பும் வாயடைக்கும்
பைந்தண் பொழில்சூழ் குளந்தைநகர்ப்
பரையே தாலோ தாலேலோ
பணிலம் உயிர்த்த தரளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ.

முலையைக் குவடெனவும், அதனை மருப்பெனவும் கூறியதனால் முலைக்குவடாம் மருப்பு என இயைக்க. கவின்ற - அழகு செய்த. உரோமப் புழைக்கரத்தால் - மயிரொழுங்காகிய துளையுள்ள துதிக் கையினால். அலமரல் - வருந்தல். துவளல் - அசைதல். கிளவி - சொல். விண்டு - விட்டு. வாயடைத்தல் - பாடா திருத்தல். (உஅ)

சுரும்பர் துளைக்க உவட்டெடுத்துச்
சொரியும் இரதச் செழுங்கரும்பைச்
சுவைத்துக் கதலிக் குலைசாடித்
தூங்குந் தெங்கம் பழஞ்சிதறி
விரிந்த பசுநெட் டிலைக்கமுகின்
மேவிக் ககனத் தருவையதன்
மீது படர்பூங் கொடிவழிபோய்
மிதித்துக் குனித்து விளையாடி
வரிந்த கழையில் நெடுங்கயிற்று
வழிபோய் நடிக்கும் பொருநர்திறம்
மானக் குரக்குக் குலங்குதிக்கும்
வளஞ்சேர் பொதும்பர் சூழ்குளத்தூர்

பரிந்து தொழுவோர் மனத்துநறும்
பாகே தாலோ தாலேலோ
பணிலம் உயிர்த்த தரளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ.

உவட்டெடுத்து -. பெருக்கெடுத்து. சுவைத்து - கடித்துச் சுவைத்து. தூங்குதல் தொங்குதல் (அசைதல்). தெங்கு-தென்னை. ககனம்தரு - விண்ணிலுள்ள தேவதருக்கள். குனித்து - நடித்து. வரிந்த கழை - கட்டின மூங்கில் (கழைக் கூத்தர் என்பதும் இதனை லறிக). பொருநர் - கூத்தர். திறம் - தன்மை. மான - ஒப்ப. (உக)

கழைக்கூத்தர் போலக் குரக்குக்குலம் குதிக்கும் குளத்தூர் என இயைக்க.

வேறு

சுலவித் தரளப் பவளக் குவைகள்
சுருட்டிக் கரைபுரளும்
துவலைத் திரைமைக் கடல்கின் றெழுமிரு
சுடர்கள்முன் அச்சுடர்தம்
சிலையிற் கவினக் குயிலும் உருப்புனல்
தீயைப் புடைபெருகச்
சிந்திப் பனிகூர் பொழுதிற் புனலிற்
சேர்ந்தற மாற்றுநரை
உலரத் தெறுவெப் புடைவே னிற்பொழு
தொள்ளெரி வாய்த்தவநோன்
புழப்ப வரைப்பொரு நொச்சி மதிற்குலம்
ஓங்கு குளந்தையெனும்
தலனிற் பொலிவு பெறப்பயி லுங்கொடி
தாலோ தாலேலோ
தகரக் குழலாய் அமுதப் பிடியே
தாலோ தாலேலோ.

சுலவி - சுற்றி. துவலைத்திரை - நீர்த்துளிகளையுடைய அலை. அச்சுடர் தம் சிலை என்பது - சந்திர காந்தக்கல், சூரிய காந்தக்கல். இருசுடர் என்பதை அகரச்சுட்டு உணர்த்திய தென்க. குயிலும் உரு - (மதில்களிற்) பதிந்த வடிவங்கள். அறம் ஆற்றுநர் - அறஞ் செய்பவர்கள். உலர - காய. உழப்பவர் - செய்பவர். பொரும் ஒக்கும். நொச்சி மதில் - ஒரு பொருட் பன்மொழி. நொச்சி -

நொச்சிச் செடியுமாம். இது நொச்சி - பாடாண்டிணையில் ஒன்று மாம். 'நொச்சியை முற்றியந் நொச்சியிலுள்ளார் பச்சிள நொச்சி பறித்தணியாமே' என்பதையுநோக்குக. குயிலுமுரு திங்கள் முன் புனலையும் சூரியன்முன் தீயையுஞ் சிந்திப் புனலில் அறஞ்செய் பவரையும், தீயில் தவம் இழைப்பவரையும் பொரும் என முடிக்க.

கொங்கு விரிந்த நறுங்க மலங்கள்
கொழிக்கு மதுப்புனலாக்
குவிதர ஊழ்த்துதிர் தண்ணிய தாது
குவிக்கும் எருக்குவையாப்
பங்க நிரந்த வயற்கண் விளைந்து
பழுத்தெழு நெற்குலைபோய்ப்
பசும்புர வித்திரள் பூட்டிய தேரிற்
பரிதிக் கடவுள்புடைப்
பொங்கொளி வெண்கவ ரித்தொகை வீசுவ
போல ஒசிந்தசையும்
பொற்பு மிகுங்கம லாகர மேவிய
பூரணி மெய்யடியார்
தங்கள் பணிக்கென எம்மை அளித்தவள்
தாலோ தாலேலோ
தகரக் குழலாய் அமுதப் பிடியே
தாலோ தாலேலோ.

கொங்கு - மணம். கொழித்தல் - குவித்தல். ஊழ்த்து - பதங் கெட்டு. தாது - பூப்பொடி. எரு - குப்பை. பங்கம் - சேறு. கவரி - சாமரை. ஒசிந்து - துவண்டு. கமலாகரம் - குளத்தூர். தகரம் - மயிர்ச் சாந்து. (௩௧)

பவளக் கொடிபடர் வேலை முகட்டிற்
பாயொளி கான்றெழுசெம்
பரிதி நிகர்ப்பச் செம்மணி மாலை
பரப்பிய மைக்குழல்மேல்
திவளக் கதிர்விடு கொண்டை திருத்திச்
செஞ்சுடர் வாள்மகரத்
திருவணி யக்கடல் மகர மெனத்தனி
செருகிப் பகைஞருளந்

தவளச் சிலைபடு கணையென நுதலிற்
சுட்டி தரித்தருகிற்
சுடர்பிர தாப மெனப்பொட் டெழுதித்
துன்னிய கீர்த்தியெனத்
தவளப் பணிமூக் கிட்டொளிர் பாவாய்
தாலோ தாலேலோ
தகரக் குழலாய் அமுதப் பிடியே
தாலோ தாலேலோ.

வேலை - கடல். முகடு - உச்சி. பாய் ஒளி - பரந்த வெளிச்சம். நிகர்ப்ப - ஒப்ப. செம்மணி மாலை - மாணிக்க மாலை. மை - கருமை. கொண்டை - ஐம்பாலிலொன்று. மகரத் திருவணி - மகர மீன் வடிவமாகச் செய்த திருநகை. அக்கடல் மகரம் என - அந்தக்கடலி லுள்ள சுறாவைப்போல. மகரத் திருவணி தனி செருகி எனச் சேர்க்க. சிலை - வில். கணை - அம்பு. சிலை பருகணை யென நுதலிற் சுட்டி தரித்து என்பது சிலை நெற்றிக்கும் கணை சுட்டிக்கும் ஒப்பாகக் கூறியதெனக் கொள்க. பொட்டு - சிந்தூரப்பொட்டு. தவளப்பணி - வெண் நகை (முத்து நகை) பிரதாபத்திற்குச் செம்மையும், கீர்த் திக்கு வெண்மையும் நிறமாகக் கூறிய துணர்க. (கஉ)

வேறு

பரந்த வெண்புணரி மீதோன் வேதா மாதேவர்
பணிந்து தொண்டுசெய வேலே சேலே போலாடுங்
கருங்க ணுந்தமளி யீவாய் பாவாய் தாவாது
கறங்கு வண்டளக மானே தேனே ஏனோர்தம்
புரங்க டந்தநகை வாயார் தூயார் சேயார்பாற்
புணர்ந்தி டும்பசிய தோகாய் காவாய் நீகாவென்
றிரங்கும் அன்பரக வாழ்வே தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ.

வெண் புணரி - பாற்கடல். வெண் புணரிமீதோன் - திருமால். வேதா - பிரமன், வேதத்திற்குரியவன். உந்துதல் - முற்செலுத்தல். அளி - அருள். தாவாது - வருத்தப் படாமல். கறங்குதல் - ஒலித்தல். புரங்கடத்தல் - முப்புரங்களை வெல்லல். நகை - சிரிப்பு. சேயார் - செந்நிறத்தவர். புணர்ந்திடும் என்றமையால் சேய்மையிலுள்ளவர் என்னும் நயமும் உள்ளதுகாண்க. அகம் - மனம். இலம் - இல்லம்.

மலங்க டங்குமரு ளூராய் தாலோ தாலேலோ
    மலங்க டங்குமரு ளூராய் தாலோ தாலேலோ
கலங்க லந்தவரை யேயாய் தாலோ தாலேலோ
    கலங்க லந்தவரை யேயாய் தாலோ தாலேலோ
புலங்க டந்தபர நாடாய் தாலோ தாலேலோ
    புலங்க டந்தபர நாடாய் தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ
    இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ.

மலங்கு அடங்குதல் - கலங்குதலொழிதல். மலங்கல் - கலங்கல். மலங்கி - முதனிலை மாத்திரை நின்று தொழிற்பெயர்ப் பொருளுணர்த்திற்று, முதனிலைத் தொழிற்பெயர். மலங்கு + அடங்கும் + அருள் + ஊராய், மலங்கள் - மும்மலங்கள். தங்கும் மருள் - தங்குகின்ற மயக்கம். ஊராய் - செல்லாதவளே: எதிர்மறை. ஊர்தல் - செல்லுதல். கலம் + கலந்த + அரை + எய் + ஆய் - கலம் - மேகலாபரணம். கலந்த - பொருந்திய. அரை - இடையை. எய் - பெற்றுள்ள. ஆய் - தாயே. கலங்கு + அலந்தவரை + ஏயாய். கலங்கு - (அறிவு) கலங்குகின்ற. அலந்தவரை - துன்பமுற்றவரை. ஏயாய - சேராதவளே. புலம் + கடந்த + பரம் + நாடாய். புலம் - எல்லாத் தேயங்களையும். கடந்த - கடந்துநின்ற. பரம் நாடாய் - வீட்டு நாட்டையுடையவளே. புலங்கள் + தந்து + அபரம் + நாடாய். புலங்கள் - அறிவுகளை, தந்து - கொடுத்து, அபரம் - பின்னிடுதலை, நாடாய் - விரும்பாதவளே, அபரம் - பின். அபரபக்கம் என்பதாலுணர்க. இலங்கு உளம் தைவருதாளாய் - விளங்குகின்ற அன்பர்களுடைய மனத்தின்கண் மிகப்பொருந்துகின்ற கால்களையுடையவளே. தைவரல் - தடவுதல்; இங்கு பொருந்தலுக்காயிற்று. இலம் - குளந்தை வருதாளாய் என்பதைக் குளந்தையிலம் வருதாளாய் என மாற்றிக் குளத்தூர் இல்லமாக வருகின்ற முயற்சியுடையவளே எனவும் கொள்க. தாள் - முயற்சி. (௩௪)

௪. சப்பாணிப்பருவம்

இஃது ஒன்பதாவது திங்களில் நிகழ்வது. இது குழவி கையொடு கை பொருந்துமாறு கொட்டும்படி கூறும் பருவமாம். பாணி - கை.

உருப்பொலி மணிப்புனல் உடுக்கைப் புலிக்கொடி
உரத்திற் குலாவுமாக்கள்
உருத்தொன்றை ஆற்றினெதிர் பத்தாற்றுவோமெ
உரைக்கிலக் கியமாகவொண் [ணும்
குருப்பொலி விரற்செறி செறித்துப் பொலந்தொடிகள்
கொழுவித் தனைப்பரிவினாற்
கொண்டாடி நின்றிருத் தாதைகிளை ஒன்றைக்
குழைத்துப் பணித்த இறைவன்
திருப்பொலி கடுக்கைதழை தோட்குவடு பத்தையும்
செழுந்தழும் பாக்குழைத்துத்
திறல்கொண்ட நறுமலர்க் காந்தளங் கைத்தலஞ்
சேந்தழ கெறிப்பஇமையோர்
தருப்பொலி மலர்த்தொடைக் கூந்தலமு தாம்பிகை
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே.

உடுக்கை - உடை. 'உடுக்கையிழந்தவன் கைபோல்' என்றதால் அறிக. உரம் - மார்பு. 'ஒன்று செய்தாற் பத்துச் செய்வேன்' என்பது பழமொழி. குரு - நிறம். விரற்செறி - விரலிற் போடுவதாகிய மோதிரம். பொலம் - பொன். தொடி - வளையல். தாதை - இமயமலை. கிளை - மேருமலை. மலைக்குமலை சுற்றமாயிற்றென் றுணர்க. குழைத்தல் - வளைத்தல். தோட்குவடு - தோளாகிய மலை. செழுந்தழும்பாக்குழைத்து - செழுமையான வடிவாகும்படி குழைவித்து. இது காஞ்சிப் புராணக்கதை. சேந்து - சிவந்து. சுவை காணல் - இனிமை யுணர்தல். (௩௫)

உள்ளொளி ததும்பிமேற் பொங்கிப் புறத்திலும்
உவட்டெடுத் துப்பரந்தாங்
கொழுகொளிய வெண்ணீறு மெய்ம்முழுது மட்டித்
துயர்ந்தவடி யார்கள்குழுமி

வெள்ளொளியி னானுஞ் சிவத்துதி முழக்கானும்
வேங்கைமக வுக்களித்த
விதிவச நினைந்தின்னும் வேண்டுவார்க் கருளாமை
வேண்டுதும் எனுங்கருத்தால்
தெள்ளுநீம் பாற்கடல் வளைந்தெனச் சூழ்போந்து
சேர்ந்தனர் நெருங்குபொதியில்
தெய்வத் திருக்கேள்வர் ஆட்டினுக் கேற்குந்
திருத்தாளம் என்னமலரைத்
தள்ளியெழில் பூத்தநின் செங்கைத் தலங்கொண்டொர்
சப்பாணி கொட்டியருளே.
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே.

உள்ளொளி - உள்ளிடத்திருக்கும் ஞானவொளி. பரந்தாலாங்கு என்பது பரந்தாங்கு என வந்தது. பரந்தாங்கு - பரவியது போல என்க. மட்டித்தல் - பூசிக்கொள்ளுதல். வேங்கை - வியாக்கிரபாதர்: புலிக்கால் முனிவர். மகவு - அவர் மகவாகிய உபமன்னியர்.

வேங்கை மகவுக்களித்த கதை:—பண்டொரு காலத்தில் உபமன்னிய முனிவர் குழவியாயிருந்த பொழுது தில்லைப் பொதுவிற் சென்று கூத்தப்பெருமான் எதிரினின்று பால்வேண்டி யழுதனர். அதுகண்ட இறைவர் பாற்கடலை வரவழைத்துக் கொடுத்தருளினர் என்பது. 'பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்த பிரான்' என்பதாலிதையறிக. இதனைக் கோயிற்புராணம் வியாக்கிரபாதச் சருக்கத்திற் காண்க. கேள்வர் - தலைவராகிய கூத்தப் பெருமான். திருவெண்ணீறு உடல் முழுதும் பூசின அடியார்கள் கூடின வெள்ளொளியினாலும், சிவத்துதி முழக்கானும், பாற்கடல் வளைந்தாற்போலும் சேர்ந்து நெருங்குகின்ற பொதியிலில் எனச் சேர்த்துக்கொள்க. (௩௬)

ஐவகைச் சுத்தியும் அமைத்துவான் கம்பைநதி
அருகன்பு பூப்பமலரால்
அஞ்சலி நிறைத்துமேல் நோக்கிமுக மதியின்எதிர்
அல்லிய தெனக்குவிந்து
மெய்வகைத் துவாதசாந் தத்தலத் தானந்த
வெள்ளப் பெருஞ்சோதியை
விரிமலர்த் தவிசாக வேற்றுமுன் போலென்ன
மீண்டுங் குவிந்திழிந்தாங்

குப்வகைச் சிவலிங்க நாப்பணு ஆகித்தவ்
வும்பனய னச்சுடரெதிர்
உறக்குவிந் தலர்விரைவு மானமுத் திரைகொடுத்
தலவாது பூசைமுற்றுஞ்
சைவமுறை யாற்றுகைப் பங்கயஞ் சேப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே.

...

ஐவகைச் சுத்தியும் அமைந்து - பூதசுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி ஆகிய ஐந்துவகைச் சுத்திகளை யுஞ் செய்துகொண்டு. அன்பு பூத்தல் - அன்புண்டாதல். அல்குதல்- சுருங்குதல். துவாதசாந்தத்தலம - தலையின்மேல் பன்னிரண்டங்கு லங் கடந்த அளவு. தவிசு - பீடம். நாப்பண் - நடு. ஆவாகித்து - மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து. அவ்வும்பன் - அச்சிவலிங்கப் பெருமான். நயனம் - கண். சுடர் - சந்திரன், சூரியன். மான - ஒப்பாக. முத்திரை கொடுத்து - முத்திரைகள் கொடுத்து. முத்திரை வகையாவன: குவிதலுக்குத் தேன் முத்திரையும், விரிதலுக்கு மகா முத்திரையுமென இரண்டெனக் கொள்க. சுத்தி அமைந்து - அஞ்சலி நிறைத்து மேனோக்கிக் குவிந்து ஏற்றுக்குவிந்திழிந்து ஆவாகித்துக் கொடுத்து ஆற்று பங்கயம் என இயைக்க. சேப்ப - சிவப்பாக. ஆங்கு - அசை. இது தீக்கை பெற்றுச் சிவபூசை செய்வார் இடத்தில் கேட்டறிதற்பாலது. (கூஎ)

கடவுட் பொலம்பூமி காண்டற் கெழுந்தெனக்
கடையுகப் பெருவெள்ளநீர்க்
கடல்மிசை மிதந்திட்ட பூந்தராய் தழையவரு
கௌணியர்கள் குலமணிக்கு
முடவுப் பிறைக்கண்ணி மோலிப் பிரான்சைவ
முறைநெறிச் சோகாப்பவன்
மூடப் புறச்சமய முழுவதுஞ் சோகாப்ப
மூண்டசிலை யோடுபுல்லும்
அடவிக் களிக்குந் தமிழ்க்குரிசில் நீறிட
அமண்கையர் உண்ணீறிட
அருண்மடை திறந்தூற்று திருமுலைப் பால்கறந்
தமிழ்தனா னங்குழைத்துத்

தடவுப்பொன் வள்ளத்து வைத்தூட்டு செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே.

கடையுகப் படுவெள்ளநீர் - யுகாந்த வெள்ளநீர். பூந்தராய் - சீகாழி. கௌணியர் குலமணி - கௌணியர் குலத்திற் பிறந்த திருஞான சம்பந்த நாயனார். முடவுப்பிறை - வளைந்த திங்கள். கண்ணி - மாலை. மோலி - மௌலி. சோ - அரண். சைவ முறை நெறியாகிய சோ என்க. சோகாந்தல் - துன்பமடைதல். சிலை - விற்கொடி. புல் - புலிக்கொடி. அடவிக்களித்தல் - காட்டிற்குக் கொடுத்தல். இவ்விரு கொடிகளையும் அடவிக் களித்தலென்பது அக்கொடிகளையுடைய இருமன்னரையும் நாட்டை விட்டுக் காட்டிற்கோடச் செய்தல். கையா - கீழோர (சமணர்). உள்நீறிட - மனம் வேக. தடவு - பெருமை. குலமணிக்கு அமிழ்தஞானம் குழைத்து ஊட்டு செங்கை என முடிக்க. (௩அ)

தீங்கனிக் கிளவியால் யான்றவக் கோட்டிய
செழுங்கழையும் முகமூரல்நீள்
சேயரிக் கண்ணான் மெலித்தவர விந்தமுந்
தேங்கமழு நறுமுல்லையும்
பூங்குவளை மலருங் கதிர்த்தபொன் மேனியிற்
போரிட் டொழித்ததளிர்கள்
பொங்கியொளிர் மாழையும் பிண்டியுஞ் சோகாந்து
போதுவன வற்றையகலா
ஏங்குகடல் உலகமுதல் எல்லாம் பணித்திடும்
இருஞ்சமர்த் திண்மையுதவி
இடையாத வில்லென்றும் அம்பென்றும் வைத்ததென்
என்றுநீ ஒன்றொன்றைத்
தாங்கொளி ததும்பிடத் தாக்கியாங் கங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே.

தவ - மிக. கோட்டிய - வளைத்த. கழை - கரும்பு. மெலித்தல் - மெலியச்செய்தல். 'முகமூரனீள் சேயரிக்கண்ணான் மெலித்த அரவிந்தமும் தேங்கமழு நறுமுல்லையும் பூங்குவளை மலரும்' என்பதை, முகத்தால் மெலிவித்தது அரவிந்தமும், மூரலால் மெலி

வித்தது முல்லையும், கண்ணால் மெலிவித்தது குவளை மலரும் எனக் கொள்க. மூரல் - பல். கதிர்த்தல் - ஒளிவிடல். மாழை - மா. பிண்டி - அசோகு. தளிர்கள் - துளிர்கள். தளிர்கள் பொங்கி யொளிர் மாழையும் பிண்டியும் மேனிக்கு ஒவ்வாமையால் துன்புற்றன வென்க. சோகாந்து - துன்பத்தை யடைந்து. அணையா - சேர்த்து. செய்யா என்னும் வாய்ப்பாடு. பணித்திடுதல் - வணக்குதல். திண்மை - வன்மை. வில்லென்றும் என்றது கழையை வில்லென்றும், அம்பென்றும் என்றது அரவிந்தம் முதலியவற்றை அம்புகளென்றும் எனக்கொள்க ஒன்றோடொன்றை என்றது - ஒரு கையோடு ஒரு கையை என்றபடி. அம்மையாரின் கைகளில் கரும்பு வில்லும் ஐமலரம்புகளு முண்மையாலிங்ஙனம் கூறினர். இதைத் தணிகைப் புராணம் அம்மையார் வணக்கச் செய்யுளாலறிக. (௩௯)

வேறு

தவப்பய னைத்தொழு வார்க்கருள் செய்ய
தடக்கையின் ஏற்றுபொலந்
தடவுத் தொடியிற் செறியு மணிக்கண்
தத்திப் பாய்ந்திடுநின்
சிவக்கும் அரிக்க ணிழற்று நிழற்றுணை
செவ்விய நவ்விமறிச்
சீர்செயல் நோக்கி மகிழ்ந்துற வாடச்
சேர்க்குதும் என்றுமனம்
உவப்ப உவப்ப மறிந்து மறிந்தும்
உறக்க வவிக்கவவி
உயிர்த்து வளர்த்தருள் கூர்திரு மேனை
உளங்குளி ரச்சுழலும்
குவைக்கவின் மொய்த்த தளிர்க்கையின் அம்பிகை
கொட்டுக சப்பாணி
குளந்தை வயங்க வயங்கும் இளங்குயில்
கொட்டுக சப்பாணி

அருள் - வினைத்தொகை. செய்ய - சிவந்த. தொடி - வளையல். தத்தி - தாவி. சிவக்கும் அரி - சிவந்த வரி. நிழற்றுணை - கண்களின் நிழலாகிய இரண்டு சாயல்கள். நவ்விமறி - மான்கன்று. மறி மான் என்னும் பொருள் உள்ளதேனும் ஈண்டு அதன் கன்றையே உணர்த்திற்று. உறவாட - அக்கன்றுகள் ஒன்றோடொன்று நட்புக்கொள்ள. உவ[illegible]ல். மறிந்து மறிந்தும் உறக்

கவவிக்கவவி - மறுபடியும் மறுபடியும் பொருந்துமாறு அகத்திட்டு அகத்திட்டு. கவவு - அகத்திடுதல். அகத்திடுதல் என்பது அருகே காட்டிக்காட்டி வாங்குதல். உயிர்த்து - பெற்று. சுழலல் - சுற்றல். குவைக்கவின் - மிக்க அழகு. (௪0)

அரக்கெழில் கொண்டு கனிந்த செழுங்கனி
யாகச் சேயொளியை
அள்ளி இறைக்கு முருக்கலர் போலழ
காரத ரத்தினையும்
சுரக்கு நறுஞ்சுவை வானமிழ் தேந்து
சுடர்த்திரு வள்ளமெனத்
தூய மணித்தர ளத்தொடை பூண்டு
துணைத்த தனத்தினையும்
பரக்கு நிறத்தளிர் என்று பசுங்கதிர்
பம்பிய மேனியையும்
பார்த்துத் துய்த்திட வாயூ றுஞ்சிறு
பச்சை யிளங்கிளிதன்
குருச்சிறை தைவரும் அங்கையின் அம்பிகை
கொட்டுக சப்பாணி
குளந்தை வயங்க வயங்கும் இளங்குயில்
கொட்டுக சப்பாணி

அரக்கு - செம்மை. அதரம் - வாயிதழ் இன்கனியாகவும் முருக்கலர் போலவும் அதரத்தினையும் வானமிழ்து ஏந்து வள்ள மெனத் துணைத்த கொங்கைகளையும் தளிரென்று கதிர்பம்பிய மேனியையும் பார்த்துத் துய்த்திட வாயூறுங்கிளிக் குருச்சிறை தைவருங்கை எனக்கூட்டுக. தொடை - மாலை: தொடுக்கப்பட்டது. துணைத்த - இரண்டாகவுள்ள. பம்புதல் - பரவல். குரு - நிறம். ஈண்டுப் பசுமையின் மேற்று. தைவரல் - தடவல். (௪௧)

முழங்கும் இசைச்சிறை வண்டு விருந்துணும்
முண்டக நாள்மலர்கள்
மூரி மணித்தவி சாக வளர்ந்தருள்
மூவிரு செவ்வுருவும்
தழங்கு குளங்கரை யெய்தி யெடுத்தெழில்
தங்கிடும் ஒருருவாத்
தழுவி முலைக்குவ டார அணைத்தெதிர்
தாங்குதல் ஆற்றகிலா

தழுங்கி விடுத்தொழி கங்கையுள் வெள்கி
அலேந்து விளர்ப்பமுலே
அமிழ்தம் அருத்தி வளர்த்தருள் கூர்ந்தரு
மைச்செயல் ஆற்றியநின்
கொழுங்கவின் மொய்த்த செழுங்கையின் அம்பிகை
கொட்டுக சப்பாணி
குளந்தை வயங்க வயங்கும் இளங்குயில்
கொட்டுக சப்பாணி.

மூரி - பெருமை. மூவிரு செவ்வுரு (அறுமுகக்கடவுளுடைய) ஆறு வகைச் செவ்விய வடிவம். ஆர்தல் - பொருந்தல். ஆற்றகிலாது-தாங்கமுடியாமல். உள்வெள்கி - மனம் நாணி. விளர்த்தல் - வெளுத்தல். கங்கை தாங்கமுடியாமல் சரவணத்துய்த்த ஆறுவடிவத்தையும் ஒன்றாக்கி அவள் நாணி விளர்ப்ப எடுத்தணைத்துப் பாலருத்தி வளர்த்த செழுங்கைகொண்டு சப்பாணி கொட்டுக எனப் பொருள் கொள்க. (௩௨)

வேறு

மதுகரம் உலவிய துளப உரத்தினன் மட்டாரும்
மரைமலர் நிலவிய மறைமுனி பொற்றவி சிற்றேவர்
முதுமணி முடிகுனி தரவர சிற்பொலி புத்தேளும்
முதலிய அனைவரும் முளரி நிகர்த்த கரத்தால்விண்
நதிதரு புனலொடு தருமலர் நச்சி யிணைத்தாளின்
நவையறு விதிமுறை சொரிதர மிக்க குளத்தூர்வாழ்
இதமுறு பரசுக வடிவினள் கொட்டுக சப்பாணி
இமகிரி தரவரும் உமையவள் கொட்டுக சப்பாணி.

மதுகரம் - வண்டு. உரத்தினன் - மார்பினன். மட்டு - தேன். மறைமுனி - பிரமன். குனிதரல் - வணங்கல். தேவர்......அரசிற் பொலிபுத்தேள் - தேவேந்திரன். விண்ணதி - ஆகாய கங்கை. தருமலர் கற்பகத் தருமலர். நச்சி - விரும்பி. நவை - குற்றம். இதம் - நன்மை. பரசுகவடிவினள் - உயர்ந்த இன்ப வடிவினளே. (௩௩)

அருள்பெறும் அடியவர் விழியளி சுற்று மணத்தேனே
அவனியின் இடையறம் எவையும்வளர்த்த சுவைப்பாகே
திருமலர் அமரர்கள் சொரிதரு பதும பதத்தாயே
தெளிமறை நெறியினர் உளமொளிர் வித்த சுகப்பேறே

முருகவிழ் மதுவழி நறுமலர் மொய்த்த குழற்கோதாய்
முனிவரர் மறையவர் அடியர் பழிச்சு குளத்தூரின்
இருமையும் உதவிடு மடமயில் கொட்டுக சப்பாணி
இமகிரி தரவரும் உமையவள் கொட்டுக சப்பாணி.

அறம் எவையும் - முப்பத்திரண்டு அறங்களையும். பத்மபதம் - தாமரையடி. உளம் ஒளிர்தல் - உள்ளத்தை விளங்கச் செய்தல். முருகு - மணம். மொய்த்தல் - நெருங்கல். குழல் - கூந்தல். கோதை - கூந்தல். ஆகலான் குழற்கோதை, ஒரு பொருள்குறித்த சொற்கள். இருமை இம்மைப் பயனும் மறுமைப் பயனும். (சச)

ரு. முத்தப்பருவம்

பதினோராவது திங்களில் நிகழ்வது. இது பிள்ளையை முத்த மிடும்படி வேண்டிக்கூறும் பருவமாம். முத்தம் - வாயிதழ்.

பகைத்த புரிசை மூன்றுமொரு
பதத்தின் இறுத்துத் திருக்குளந்தைப்
பதியிற் கருணை பூத்தலர்ந்த
பரமா னந்தப் பெருவாழ்வை
நிகர்ப்பச் சிறுவெண் மதிகடந்த
நெடுவாள் நுதல்மேற் போந்துலவி
நெறிக்கும் புருவச் சிலைகோட்டி
நெய்த்துப் பழுத்த கொலைவேல்போல்
வகுத்த மதர்க்கட் சரந்தொடுத்து
மணிமே கலைசூழ் அல்குலந்தேர்
வாய்ப்ப வெளிக்கொண் டெமதுமும்மை
மலச்சோ அழலப் புன்மூரல்
முகிழ்க்குந் தரளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியும் நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே.

ஒருபதத்தின் இறுத்து - ஒரே சமயத்தில் அழித்து. பரமா னந்தப் பெருவாழ்வு - சிவபெருமான். நெறித்தல் - செவ்வையாய் நிறுத்தல். புருவச்சிலை கோட்டி - புருவமாகிய வில்லை வளைத்து.

நெய்த்து - நெய்த்தன்மை பொருந்தி. பழுத்த - சிவக்கக் காய்ச்சப் பட்ட. கட்சரம் கண்+சரம்: கண்ணாகிய அம்பு. மும்மை மலச் சோ அழல ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களாகிய கோட்டைகள் தீப்பற்ற. புன்மூரல் முகிழ்க்கும்-சிறுநகை செய்யும். பெருவாழ்வை நிகர்ப்ப மூரல் முகிழ்க்கும் எனக் கூட்டுக. (௪௫)

வளைத்த கருப்புச் சிலையெடுத்து
வனசக் கணையு மாங்கணையும்
வாசங் கமழு நறுநீல
மலர்ப்பூங் கணையும் அசோகினிடைத்
தளைத்த நனைதாழ் கொடுங்கணையுந்
தழுவிக் கொணர்ந்தென் னுடுந்தொடுத்துச்
சகல புவனங் களும்பணிக்குந்
தண்ணங் குடையெங் குரிசிலைக்கண்
திளைத்த எரியாற் படப்பொருத
திருவார் குளந்தைச் சிவவாழ்வைச்
சிந்தை மருட்டிப் பணிப்பலெனத்
திறல்கொண் டெழுந்த தளவம்போல்
முளைத்த முறுவற் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியும் நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே.

தளைத்தல் - பிணித்தல். நனை - முகை: அரும்பு. எம் குரிசில்- எம்முடைய அரசனை மன்மதன். கண் திளைத்த எரி - கண்ணி லுண்டான நெருப்பு. பொருத - போர்செய்த. சிந்தை மருட்டல்- மனத்தை மயங்கச்செய்தல். பணிப்பல்-பணியச்செய்வேன். தளவம்- முல்லை. முறுவல் - நகை. களபம் - கலவைச்சாந்து. (௪௬)

பிதிரும் பொறிப்பொற் சிறைவிரித்துப்
பெருந்தேன் மடுத்துத் தாதளைந்து
பெடையோ டாடிக் களிபூத்துப்
பிறழா வகையின் னிசைபாடி
அதிரும் பலவண் டினமுழக்க
அலரும் பொகுட்டுத் தேங்கமல
அலர்க்குந் தனக்கும் பகைமையுற
அமைத்துக் குளத்தூர் அமர்ந்தருளிக்

கதிரும் பெருமான் உளக்கமலந்
தனையு மலர்த்தி வயமாக்கிக்
கலப்பான் எழுந்தா லெனவதனக்
கலைவான் மதியின் அரும்புநிலா
முதிரும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியும் நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே.

தாது - மலர்ப்பொடி. களிபூத்தல் - மகிழ்வடைதல். தனக்கும் என்றது, வதனமதியைக் குறித்தது. பெருமான் - சிவபெருமான். கலப்பான் - சேரும்பொருட்டு: எதிர்கால வினையெச்சம். அரும்பு-சிறுக உண்டாகின்ற. நிலா - நகையாகிய நிலா. (௪௭)

கொழுது வரிவண் டினமுரலாக்
குளிர்பூந் தொடையல் முடிசாய்த்துக்
கும்பிட் டிறைஞ்சுங் கடவுளர்தங்
குழாத்தைச் சிறிதும் மதியாத
பழுது நிலவாத் திருக்குளந்தைப்
பதிவாழ் இறையோன் விழிச்சுடரின்
பரிசு நோக்கி மணியிதழ்க்க
பாடஞ் சிறிதே திறந்துருவம்
எழுதும் வினைஞர் தொழிற்கடங்கா
எழிலார் தனதொள் ளொளிகாட்டி
எழுந்தச் சுடரை வயமாக்கி
ஏக்கற் றமையும் பார்த்திருப்ப
முழுதும் அடிமை கொளுநகைவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியும் றுங்களப
முலையாய் முத்தந் தருகவே.

முரலா - முரன்று: ஒலித்து, செய்பா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். முடிசாய்த்தல் - வணங்கல். இறைஞ்சுதல்-தொழுதல். பரிசு - தன்மை. மணி இதழ்க் கபாடம்-அழகிய உதடாகிய கதவு. உருவம் எழுதும் வினைஞர்-ஓவியம் எழுதுவோர் (சித்திரக் காரர்.) தொழிற்கு அடங்கா எழிலார் தனது ஒள் ஒளி என்றது, ஒளி எழுத முடியாதென்பதை உணர்த்துகின்றது. அச்சுடர் - அந்தக்

கண்ணின் சுடர். ஏக்கறல்-தாழ்ந்து நிற்றல். அமையம்-சமையம். முருகு - நறுமணம். (௬௮)

இகந்த மனத்தாற் கடல்கடைந்த
இமையோர் வெருவ எழுங்காளம்
எடுத்துப் பருகுந் திருக்குளந்தை
இறைவன் பவளத் திருவாய்க்கும்
சகந்த னிலைமை தவாதோங்கத்
தாவிக் குதிக்குஞ் சிறுமறியான்
தழங்கும் அரும்பே ரொலிமுழுதுந்
தாங்குஞ் செவிக்கு மருந்தாக
உகந்த ஒளிதுன் றியஎயிற்றின்
ஊறும் அமிழ்தப் பெருக்காறும்
உரைப்பா ணமிழ்தப் பெருக்காறும்
ஊட்டிக் களிகூர்ந் தெழிற்கடலை
முகந்த பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியும் நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே.

இகந்த - நீங்கின. மனத்தால்-மனத்தினால் (சிவபெருமானை மதியாது அவரை நீங்கிய மனத்தினால்.) காளம் - நஞ்சு. சகம்-உலகம். தன்னிலைமை - தன்னுடைய தன்மை. தவாது - கெடாது. ஓங்குதல் - உயர்தல். சிறு மறிமான் - முனிவர்கள் விட்டமான். தவாது ஓங்குஞ் செவியென்க. எழிற் கடல் - அழகாகிய கடல். இல்பொருள். திருவாய்க்கு எயிற்றின் ஊறும் அமுதப் பெருக்காறும், செவிக்கு உரைப்பாணமிழ்தப் பெருக்காறும் ஊட்டி என முடிக்க. இவை யிரண்டும் இறைவன் உண்ட காளத்திற்கும், மானொலி கேட்ட வருத்தத்திற்கும் அமிர்த மருந்தெனக் கொள்க. எழில் கடல் - அழகாகிய கடல். (௬௯)

வேறு

அசும்புபட வாய்நீர் வழிந்தோட ஒடிவங்
தணையுமைங் கரக்க ளிற்றை
ஆகத் திடைக்கொண்டல் நாப்பண் தடித்தெனு
அணைத்தலும் பணைத்து வளர்பொன்

தசும்புதனை யெதிருமிரு களிறெனத் தன்மத்
தகங்கொண்டு தாக்கி மயிரின்
தண்ணிய ஒழுக்கினை அணைக்குமொரு கந்தெனத்
தடவுக்கை யாற்சு ழியவவ்
விசும்புண்மறை பட்டெழுந் தெண்ணிலா எனநகை
விரித்தொல்லை மேலெ டுத்து
வெகுளிதீர்த் துளங்குழைய முத்தாடி வைத்தாடும்
வியனகர்க் குழந்தை வாழ்வே
பசும்பொனவிர் திருமேனி அழகொளிர நின்றுநின்
பனிவாயின் முத்த மருளே
பங்கயச் செல்விதொழ மங்கையர்க் கரசிநின்
பனிவாயின் முத்த மருளே.

அசும்பு படல் - இடையறு தொழுகல். ஐங்கரக் களிறு - மூத்த பிள்ளையார். இவரது இளமைப் பருவத்தை வாய்நீர் வழிந்தோட என்பது குறிக்கிலைாது ஆகம் - மார்பு. நாப்பண் - நடு. தடித்து-மின்னல். அம்மையாரைக் கொண்டலாகவும் மூத்த பிள்ளையாரை மின்னலாகவும் குறித்தது அன்னார் பசுமை நிறத்தையும், செந்நிறத்தையும் முறையே குறித்தற்கென்க. துப்பார் திருமேனி என்பதால் விநாயகர் செந்நிற முள்ளவரென் றுணர்க. பணைத்து - பருத்து. தசும்பு - குடம். கந்து - கட்டுத்தறி. தடவு - பருமை. சுழிய - சுற்றி வளைக்க. விசும்பு - மேகம். ஒல்லை - விரைவு. வெகுளி - கோபம். உளங் குழைதல் - மனம் இளகுதல். முத்தாடி - முத்தமிட்டு. ஐங்கரக் களிற்றை ஆகத்திடை யணைத்தலும், தாக்கி, சுழிய நகை விரித்து எடுத்துத் தீர்த்து முத்தாடி ஆடும், என இயைக்க பங்கயச் செல்வி திருமகள். பனிவாய்-தண்ணிய வாய். (௩௦)

சேட்டின மணிச்சோதி நீட்டுமிலை ஞாங்கர்நிதி
தீட்டுநின் றிட்டத்தினால்
தெள்ளிய அருட்பார்வை வெள்ளவமிழ் தம்மைநீ
தேக்கிடவும் நீக்கியளகக்
காட்டினைக் காட்டிமையல் பூட்டிளம் பேட்டனக்
கவினடைக் கன்னியரிடைக்
கட்டுண்டு மட்டுண்டு தட்டுண்டு பட்டிறுங்
காளையரின் மாழ்கரென

மூட்டியபொன் மாடகத் தியாழுக்கும் இசையூட்டு
மொழியமிழ்த மூட்டவிட்டு
மோட்டிருங் கோட்டுக் குவட்டைநிகர் வட்டமுலை
முத்தையமிழ் தென்றெக்கறாஉம்
பாட்டிசைக் கிள்ளைக்கு மீட்டுமிசை ஊட்டுநின்
பனிவாயின் முத்தமருளே
பங்கயச் செல்விதொழு மங்கையர்க் கரசிநின்
பனிவாயின் முத்தமருளே.

சேட்டின மணி. சேடு+இனம்+மணி - பெருமையுடைய கூட்டமாகிய மணி. இலை ஞாங்கர் - இலை வடிவுபோலும் வேல். உவமைத்தொகை. நுதி - முனை. நாட்டம் - கண், நாடுதலுடையது. தேக்கிடல் - நிறைதல். அளகக் காடு - அடர்ந்த கூந்தல். இளம்பேடு - இளமையாகிய பெண். மட்டுண்டு-அளவுக்குட்பட்டு. தட்டுண்டு - தடையுண்டு. படுதல் - கெடுதல். இறங் காளையரின் மாழுநர் என - முறியுங் காளைப் பருவத்தரில் மயங்குவாரைப்போல. மாடகம் - தந்தி முறுக்கும் ஆணி. ஊட்ட - உண்பிக்க. விட்டு - அதை விட்டு. மோடு-பெருமை. கோட்டுக்குவடு-சிகரத்தையுடைய மலை. எக்கறாஉம் - வேண்டிப்பெற வணங்கி நிற்கும். மீட்டும் - பிறகும். அருட்பார்வை வெள்ள அமிழ்து நீ தேக்கிடவும் நீக்கிக் கன்னியரிடைக் கட்டுண்டு மாழுநரென மொழியமிழ்தம் ஊட்ட விட்டு முலைமுத்தை அமிழ்தென்று எக்கறாஉங் கிள்ளைக்கு மீட்டு நின்வாயின் முத்தமருள் என முடிக்க. (௧௪)

மடல்கொண்ட பூந்துழாய்ப் படலைமணி மார்பினன்
மறைக்கிழவன் ஆதியண்ட
வாணரும் பதைபதைத் தோட்டெடுப் பக்கொடிய
வளைகடற் புனல்மீதெழும்
விடமுண்ட சோமேச னார்க்கினிய வாயமிழ்தம்
மெல்லெனப் பருகுவித்து
விளியாத வண்ணமென் கொங்கையஞ் சஞ்சீவி
வெற்புங் கொடுத்துமற் றும்
உடனன்றி மணிமிடற் றுலவா திருத்தலான்
ஒருகணப் பொழுதுமகலா
துருப்பாதி யிற்கலந் தனுதினம் பாதுகாத்
தொண்குளத் தூரின்மருவும்

படமொன்றும் அரவல்குல் எழிலமுத வல்லியின்
பனிவாயின் முத்தமருளே
பங்கயச் செல்விதொழு மங்கையர்க் கரசியின்
பனிவாயின் முத்தமருளே.

மடல் - இதழ். துழாய்ப் படலை - துளசிமாலை. மறைக் கிழவன் - பிரமன் அண்டவாணர் - தேவர்கள். வாழ்நர் வாண ராயிற்று. வாயமிழ்தம் - வாயிலிருந்து ஊறுகின்ற இதழ் நீராகிய அமிழ்து. விளியாதவண்ணம் - இறவாதபடி. கொங்கையஞ் சஞ் சீவி வெற்பு - தனமாகிய அழகிய சஞ்சீவிமலை. ஒன்றுதல் - பொருந்தல். சோமேசனார் விடமுண்டமையால் அவர் இறவாத படி வாயமிழ்தம் பருகுவித்துக் கொங்கையஞ் சஞ்சீவி வெற்பையுங் கொடுத்து என இயைத்துப் பொருள் கொள்க (கூஉ)

வேறு

சுறவே றியகொடி முதலா கியபடை
சுற்றி வரத்தனிபோய்ச்
சுவைநீள் சிலைகொடு மலரார் பகழி
துரக்கு மதக்கொடுவேள்
இறவே றுதல்விழி வழியூ டழலெழு
வித்த திறற்பெருமான்
எரிபோல் ஒளிவிடு சடைமா முடியின்
இருக்கும் மதிக்கடவுள்
வெறியார் திலகம தணிவா ணுதலெழி
லிற்குளம் வட்கிநறு
விரிபூ விதழியை நடுமே னியினிறு
விப்பொரு வக்கருதும்
முறிபோல் உருவினள் கமலா கரமயில்
முத்த மளித்தருளே
முதுநான் மறையறி வறியா வடிவினள்
முத்தம் அளித்தருளே.

சுறவு - சுறுமீன். படை - சேனை. சுவை நீள்சிலை என்றது கருப்புவில்லை. பகழி - அம்பு. துரக்கும் - செலுத்தும். இற - கெட. வெறி - மணம். திலகம் - பொட்டு. வெட்கி - வெட்கங் கொண்டு. இதழி - கொன்றை. நிறுவி - நிறுத்தி. பொருவ - ஒப்பாக. முறி - தளிர். சடைமாமுடியினிருக்கு மதிக்கடவுள்

திலகமணிவாணுதல் எழிலிற்கு உளம் வட்கி இதழியை நடுமேனி யினிறுவிப் பொருவக் கருதும் உருவினள் என இயைத்துப் பொருள் கொள்க. (௧௩)

பெருகார் அமிழ்தருள் ஒளிசேர் மதியெழில்
பெற்ற நுதற்கொடியே
பிறவா வருணெறி தருவா யெனுமவர்
பெட்பின் உளச்சுவையே
மருவார் தகரமும் அளிவீழ் மலரும்
மணத்த குழற்றிருவே
மதியா தவருளம் மருவா திருளென
வைத்த மடப்பிடியே
உருகா நெறியெம தௌமா சறவும்
ஒறுக்கும் அறக்கடலே
உருவாய் அளவரு மருவாய் நிறைபொரு
ளுக்கொரு வைப்பிடமே
முருகார் பொழிலணி கமலா கரமயில்
முத்த மளித்தருளே
முதுநான் மறையறி வறியா வடிவினள்
முத்தம் அளித்தருளே.

பெருகுதல் - மிகுதல். பெட்பு - அன்பு. மரு - மணம் தகரம் - மயிர்ச்சாந்து. அளி - வண்டு. மதியாதவா உளம் மருவாது இருளென வைத்த மடப்பிடியே என்றது, எண்ணாதவருடைய உள்ளத்திற் சேராது அவர்களுடைய உள்ளத்தை அஞ்ஞான மயமாக வைத்த மடப்பம் வாய்ந்த பெண்யானை யன்னளே என்றவாறு. ஒறுத்தல் - தண்டித்தல். நிறைபொருள் - நிறைந்த சிவபெருமான். 'எங்கு நிறைகின்ற பொருளே' என்றதினாலும் இதை யுணர்க. வைப்பிடம் - வைப்பதற்குரிய இடம். (௧௪)

கா. வாரானைப்பருவம்

பதின்மூன்றாவது திங்களில் நிகழ்வது: இது தோழியர்கள் பிள்ளை நடந்து வருதலை விரும்பியழைக்கும் பருவமாம். வாரானை-வருகை. ஆனை - தொழிற்பெயர் விகுதி.

வெள்ளித் தகட்டையரில் கொள்ளத் துறுத்தனைய
வெள்ளிய சிறைப்பவளவாய்
வெள்ளோதி மத்திரள்கள் செஞ்சிலம் பொலியினையும்
மென்மடப் பிடியினத்தை
எள்ளிக் கவின்கொண்ட திருநடைப் பொலிவினையும்
எய்யாது கற்கவெண்ணி
இகபரப் பெருவாழ்வு வேட்டவர்க் கருளுநின்
இணையடிக் கமலமலரை
உள்ளித் தொடர்ந்துசூழ் மொய்த்திடுஞ் சூழலிடை
உற்றுநீ அச்சூழலி
னெடும்பெயர்ந் தவிர்மதியம் ஊர்ந்துவரல் எய்ப்பவொளி
மாமணிகள் இருகரையினும்
அள்ளிச் சொரிந்துலவு பாலிநா டாளவரும்
அமுதாம்பி கைவருகவே
அருள்மடை திறந்தூற்று புன்மூரல் அழகொளிர
அம்பொனு யகிவருகவே.

அரில் - பின்னல், பிணக்கல். துறுத்தல் - நெருக்கமாக அழுத்தி வைத்தல். வெள்ளிய சிறை - வெள்ளை இறகு. இனம் - கூட்டம். எள்ளி - இகழ்ந்து. எய்யாது - பெறாமல். கற்க எண்ணி - அந்த ஒலியையும், நடையையும் கற்றுக்கொள்ள நினைந்து. சூழ் - சூழ்ந்து: வினையெச்சப்பொருட்டு. அச்சூழல் - அக்கூட்டம். எய்ப்ப - ஒப்ப. பாலி - பாலாறு. இகரம் - ஒன்றன்பாலையுணர்த்துவது. இது தொண்டைநாட்டாறு. மணி - முத்து. மடை - நீரை மடக்குதற் பொருட்டுப் போடப்படும் சிறுகரை, ஈண்டு அருளுக்காயிற்று. புன்மூரல் - சிறுநகை வெள்ளோதிமத்திரள்கள் ஒலியினையும், நடைப்பொலிவினையும் முன்னர் அடையாமையால் அவற்றைக் கற்றுக்கொள்ள எண்ணி உன் இணையடிக் கமல மலரை மொய்த்திடுஞ் சூழலிடை அக்குழலொடும் வருக என இயைத்துப் பொருள் கொள்க. (கரு)

துளிபட்ட தேங்கொடைக் கூந்தலைக் காரென்று
தோகைமுன் னாடிவரமென்
துணைமலர்ப் பாதநடை கற்கவன் னத்திரள்
தொடர்ந்துபின் ஓடிவரவுட்
களிபட்ட தீங்கிளவி கற்குநின் செந்தளிர்க்
கைக்கிள்ளை பாடிவரவான்
கருணைபொழி கட்கடைப் பார்வையை வியந்துமான்
கன்றினங் கூடிவரமெய்
ஒளிபட்ட வேதக் குழாங்கதறி யோலிட்
டுனைப்பெரிதும் நேடிவரவில்
உமிழ்மணிக் கோவைக் குரூஉப்பருமமீமிசை
உடுத்தவிடை வாடிவரமை
அளிபட்ட பூஞ்சோலை சூழ்குளத் தூரில்வரும்
அமுதாம்பி கைவருகவே
அருள்மடை திறந்தூற்று புன்மூரல் அழகொளிர
அம்பொனூ யகிவருகவே.

கார் - மேகம். தோகை - மயில். தீங்கிளவி - இனிய சொல். தளிர் - துளிர். மெய் ஒளி - உண்மையாகிய அறிவொளி (ஞானவொளி). ஓலிட்டு - கூச்சலிட்டு. நேடி - தேடி. வில் - ஒளி. உமிழ்தல் - வெளிப்படுத்தல். குரூஉ - நிறம் (ஈண்டுச் செந்நிறம்). பருமம் - பதினறுகோவை மணிவடம். இதன் மாறுதல் முன்னுரைத்தாம் ஆண்டுக் காண்க. மீமிசை - மேல். வாடிவர - துவள. மை - கருமை. கூந்தலைக்காரென்று தோகை முன்னாடிவர என இயைக்க. (௫௬)

வில்லுமிழ் குரூஉமணிச் சுடிகைப் பணிக்குழாம்
விரித்தபை நெரித்துருத்து
வீசுங் கலாபப் பசுந்தோகை ஈட்டங்கள்
மெல்லியலும் நடையும்வேட்டு
வல்லுறழ் மணிக்கோவை தாழ்ந்தமென் கொங்கையின்
மருங்குறச் சூழ்ந்துவரவவ்
வளரிளஞ் சாயலான் நடையினுன் வேறறிய
மாட்டாது மருளுமெம்மை
எல்லொளித் தண்ணிலா நகைகொண்டு தேற்றிமற்
றிருக்காதி யானநான்கும்

இன்னங் கிடந்துழறை யிட்டுமறி வரியநின்
இயல்பினைக் காட்டியருளி
அல்லுமிழ் தடம்பொங்கர் சூழ்குளத் தூரில்வரும்
அமுதாம்பி கைவருகவே
அருள்மடை திறந்தூற்று புன்மூரல் அழகொளிர
அம்பொனு யகிவருகவே.

சுடிகை - பாம்பின் உச்சி. பணிக்குழாம் - பாம்பின் கூட்டம். பை - படம். ஈட்டங்கள் - கூட்டங்கள். இயல் - சாயல். வேட்டு - விரும்பி. வடு - சொக்கட்டான்காய் (சூதாடுகருவி). உறழ்தல் - ஒத்தல். மணிக்கோவை - முத்துவடம். மருளுதல் - மயங்கல். தேற்றி - தெளிவித்து. தோகை ஈட்டங்கள் இயலும் நடையும் வேட்டு நின் மருங்கு வரலால் நின்வடிவென்றும் மயில்வடிவென்றும் அறியாமல் மயங்கும் என்னை நகைகொண்டு தேற்றி நின் இயல் பினைக்காட்டிக் குளத்தூரில் வரும் அமுதாம்பிகை என முடிக்க. அல் உமிழ்தல் - இருள்படர்தல், மரம் அடர்ந்தமையால் பொங்கரில் இருள்மிகும் எனக்கொள்க. 'இருள்படப் பொதுளிய' என்பதாலு மறிக. (௩௭)

வயிரா வணந்தொறும் எழுங்குளத் தூர்வந்து
வான்கோடி ரண்டாயிரம்
வாய்த்ததனை ஆளும் பிரானைமரு மத்திரு
மருப்பினல் ஆளாண்மையும்
செயிரா வணங்கினைப் பல்லுயிரும் எய்தத்
தெறாஉமலக் களிறைந்தையும்
திக்கெட்டும் அண்டப் பரப்புங் கடந்திறச்
செற்றிடும் விழிவீரமும்
பயிரா வணஞ்சொரியும் மேகத்தின் அருள்கூர்ந்த
பதநடையும் நோக்கியஞ்சிப்
பனிமால் அடுக்கலெனும் நுங்தைநின் உரிமையாற்
பரிந்துபின் வருதலேய்ப்ப
அயிரா வணம்பின்பு தொடரத் தொடைக்கூந்தல்
அமுதாம்பி கைவருகவே
அருள்மடை திறந்தூற்று புன்மூரல் அழகொளிர
அம்பொனு யகிவருகவே.

வயிர் - ஊதுகொம்பு. ஆவணம் - தெரு. எழுதல் - உண்டா தல், வான்கோடிரண்டாயிரம் வாய்த்ததனையாளும் பிரான் -

உயர்ந்த இரண்டாயிரங் கொம்புள்ள ஐராவணம் என்னும் யானையை யாள்கின்ற சிவபெருமான் என்க. இவ்யானை இறைவன் கயிலையிலுள்ளது. மருமத்து இருமருப்பினல் ஆள் ஆண்மை - மார்பிலுள்ள இரண்டு கொங்கைகளாகிய மருப்பினுல் ஆண்ட ஆண் தன்மை. இது முன்னர் வரைந்துளது. செயிரா - செயிர்த்து : செய்யா என்னும் வாய்பாடு. அணங்கினை - தெய்வத்தன்மையை. எய்தல் - அடைதல். தெறூஉம் - அழிக்கும். மறக்களிறு மூன்று - ஆணவம், கன்மம், மாயை, திரோதானம், மாயேயாம் என்பன. பயிர் ஆவணம் - பயிர்கள் செழிக்கும்படி. பனிமால் அடுக்கல் எனும் நுந்தந்தை - உயர்ந்த பனிமலையாகிய உம்முடைய தந்தை. ஐயிராவணத்துக்குப் பனிமலையை உவமைகூறினர், நிறவொற்றுமைபால். ஆண்மையும், விழிவீரமும், நடையும் நோக்கி அஞ்சி எனப் பொருந்துக. (ருஅ)

விந்தையங் கிரிதனக் கிகலியுள் ளதுமுற்றும்
வீந்தவீ றின்மையுந்தண்
வெள்ளிவே தண்டமொர் அரக்கன் பெயர்த்திட்ட
மென்மையுங் ககனமீறும்
மந்தர முதற்கிரி யிடைக்கண் பொலிந்தண்ட
மார்க்கத் திரண்டுசுடரும்
வலமாய் வரப்புவிக் காதார மானதன்
வன்மையையும் நோக்கிநோக்கிச்
சிந்தைகளி கூருமா மேருவைச் சிவபிரான்
செங்கமல அங்கைபத்துஞ்
சேர்ந்துநித் தலுமுழக் கத்தளர்ந் தொசியாது
செம்மாந்து விம்மியெள்ளும்
அந்தனச் சிகரிமிசை அருவிநித் திலமிட்ட
அமுதாம்பி கைவருகவே
அருள்மடை திறந்தூற்று புன்முறல் அழகொளிர
அம்பொனு யகிவருகவே.

வீந்த - அழிந்த. வீறின்மை - வன்மை யின்மை. வெள்ளி வேதண்டம் - வெள்ளி மலை. அரக்கன் - இராவணன். ககனம் - ஆகாயம். ஈறுதல் - முடிதல். அண்ட மார்க்கம் ஆகாய வழி. இரண்டு சுடர் - சந்திர சூரியர்கள். ஆதாரம் - பற்றுக்கோடு. உழக்க - கலக்க. ஒசியாது - துவளாமல். செமமாந்து - இறுமாந்து. விம்மி - பருத்து. எள்ளல் - இகழல். அந்தனம் அழகிய கொங்கை. அருவி நித்திலம் - அருவியாகிய முத்து மாலை. விந்தம் வீந்த வீறின்மையும், அரக்கன் பெயர்த்திட்ட மென்மையும் புவிக்கு ஆதாரமான

தன் வன்மையும் நோக்கிக் களிகூரும் மேருவை உழக்க என்னும் தனச்சிகரிமிசை நித்திலமிட்ட அமுதாம்பிகை என முடிக்க. (௪௯)

வேறு

தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித்
திட்டா நிலைமைத் தெனவுலகில்
தெரிக்குங் காழித் திருஞானச்
செம்மற் குழவிக் கருள்ஞானம்
பெய்து குழைக்க வோமுலையாம்
பெரிய மலைவாய் உறுத்துமென்றே
பெருமான் றனையுங் குழைத்தவலிப்
பெற்றி அறிந்து தடுத்தோபூங்
கையில் இலகு நகக்குறிபற்
கதுவ நோமென் றேதீம்பால்
கறந்து கொடுத்தா யெனச்சகிமார்
கனிந்து பாட நகைமுகிழ்க்கும்
வைவைத் தமைத்த மதர்வேற்கண்
வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே.

செம்மல் குழவி பெருமையிற் சிறந்த பிள்ளைக்கு. வாய் உறுத்தல் - வாயில் துன்புறுத்தல். குழைத்த வலி - இறைவனைக் குழைவுசெய்த வலி. பல்கதுவல் - பல்பற்றல். நகை முகிழ்த்தல் - சிரித்தல். வை - கூர்மை. இச்செய்யுள் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்க்கு முலைப்பால் கறந்து கொடுத்தமைக்கு நயங்கூறுகின்றது. இது பெரிய புராணம் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தி லறிக. (௫0)

குஞ்சி யசைய அசைந்துவருங்
குமரப் பெருமான் றனையேந்துங்
குளிர்பூங் கரத்துத் தொடிகறங்கக்
கொடிபோல் ஒசியுஞ் சிறுமருங்குல்
அஞ்சி நடுங்க அம்மருங்குல்
அணிந்த பருமங் கதிர்த்தேங்க
அணங்கும் இடைகண் டிரங்குவ போல்
அவிரும் மணிநூ புரமொலிப்பப்

பஞ்சி திருத்துஞ் சீறடிகள்
பதிந்த சுவடு தொறுமிமையோர்
பணிகால் மோலி நிரைபுரளப்
பதுமை முதலோர் களிதூங்க
மஞ்சி வரும்பூங் குழற்கற்றை
மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே.

குஞ்சி - குடுமி. குளிர்தல் - தண்ணெனல். கறங்க - ஒலிக்க. மருங்குல் - இடை. எங்கல் - ஒலித்தல். அணங்கும் - வருந்தும். சீறடி - சிறிய அடி. சுவடு - வடு. களிதூங்கல் - மகிழ்தல். மஞ்சு இவரும் - மேகம் விரும்பும். வளங் கூர்தல் - வளப்பம் மிகுதல். தொடிகறங்க, மருங்குல் நுடங்க, பருமம் எங்க, நூபுரம் ஒலிப்ப, மோலிபுரளக், களிதூங்க வருக என முடிக்க. தேவர் பன்முறை வணங்கலைப் பணிகால் மோலி நிரை புரள என்பது குறிக்கின்றது.

கடிகொண் டலரும் நறுங்கடுக்கைக்
கடவுள் மகிழப் பேரண்ட
கடாகப் பரப்பே சிற்றிலெனக்
கருமப் பகுப்பே சிறுசோறும்
படிகொண் டுயிராம் பாவைகட்குப்
பைதல் மலநோய்ப் பசியிரியப்
பல்கால் அயிற்றி விளையாடிப்
பரமா னந்தப் பெருவீட்டிற்
குடிகொண் டிருக்குந் தீங்கரும்பே
கொள்ளத் தெவிட்டாச் சுவையமுதே
குன்றம் பயந்த நறுங்கனியே
கொழிக்குங் கருணைப் பெருக்காறே
மடிகொண் டயரா தெமைப்புரக்கும்
வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே.

கடி - மணம். கடுக்கைக் கடவுள் - கொன்றைக் கடவுள். சிற்றில் - சிறு வீடு. பைதல் - துன்பம். மலநோய்ப் பசி இரிதல் - ஆணவ மலநோயாகிய பசி கெடுதல். அயிற்றி - ஊட்டி. மடி -

நோய். செலிட்டாத - நிறையாத. அயராது - சோர்வையடையாமல். புரத்தல் - காத்தல். (சுஉ)

தீது விளைக்குங் களப்பணியுந்
தேவர் குரவன் மனைச்செல்வி
திருக்கற் பளித்த களப்பணியுந்
திளைத்துக் கலவி செயப்புகுங்காற்
கோது விளைக்கும் பேரச்சக்
குணமும் நாணுங் கொடுக்குமெனக்
குறியே யினது சாயலுமின்
கொழிக்குங் காஞ்சி அல்குலுமே
போது விளைக்குஞ் சடைக்காட்டிற்
புகுந்து வெளிக்கொ ளாதொளிக்கப்
பொலிவு தருமால் எனச்சகிமார்
புகலச் சற்றே நகைத்தளிகள்
வாது விளைக்கு முடிசாய்க்கும்
மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே.

களப்பணி - முன்னது, களம் - நஞ்சையுடைய. பணி-பாம்பு. பின்னது, களம் - கறுப்பையுடைய. பணி - அணி, திங்கள். திளைத்தல் - நெருங்கல். கோது - குற்றம். காஞ்சி - இருகோவை மணிவடம். வாது - கலகம் பாம்பால் அச்சமும், சந்திரனல், நாணமும், சாயலாற் பாம் பொளித்தலும், அல்குலாற் சந்திர னொளித்தலுங் கொள்க. (சுங)

அயில்கண் டனையஞ் சலித்தேத்தும்
அன்னை வருக பெருங்கருணை
ஆழி வருக தீவினையேம்
ஆவித் துணையே வருகவிடந்
துயில்கண் டனையம் பலத்தாட்டுஞ்
சுடர்பொற் கொடியே வருகஇளஞ்
சுகமே வருக நறுங்குதலை
தோற்றுங் கிளவி யெனுமதுரம்
பயில்கண் டனையர் செவிக்கூட்டும்
பசுங்கோ கிலமே வருகவென்றும்

பருகத் தெவிட்டாச் சுவையமுதப்
பாவாய் வருக பசுந்தோகை
மயில்கண் டனைய இளஞ்சாயல்
மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே.

அயில் கண் தனை - இரண்டு அயில் வேலை. ஆழி - கடல் (இன்பம்). விடம் துயிலல் - நஞ்சிருத்தல். சுகம் - கிளி. குதலை - தோன்றா மொழி. கண்டு - கற்கண்டு. பருக - குடிக்க. மயில் கண்டனைய - மயிலைக் கண்டாலொத்த என இரண்டனுருபு விரிக்க.

எ. அம்புலிப்பருவம்

பதினொந்தாந் திங்களில் நிகழ்வது: இது பிள்ளையை மங்கையர்கள் இடுப்பில் வைத்துக்கொண்டு அப் பிள்ளையுடன் சந்திரனை விளையாட வரும்படி சாம, பேத, தான, தண்ட முறைகூறி யழைக்கும் பருவமாம். சாமம் - சமமாகக் கூறல், இனிமையாகக் கூறல். பேதம் - ஒவ்வாமை கூறல், வேற்றுமை. தானம் - ஈகை கூறல். தண்டம் வழக்கினும் ஒழுக்கினும் வழுவினரை வழியில் நிறுத்தத் தண்டித்தலைக்கூறல். சிலர் முன் மூன்றிலும் பொருந்தாதவரைத் தண்டித்த லெனவுங் கூறுவர்.

பொன்பூத் தலர்ந்தவன மரவங்கள் மாலரி
பொருங்களிற் றினயளாவிப்
பொங்குமலை வாய்வருங் காரணத் தாற்செய்ய
பொன்னஞ் சிலம்படியினின்
மின்பூத்து நாளும் புலம்புறச் சூழ்தலான்
மிடையுமங் கமலமயர
மிக்குறுங் குவலயம் அடங்கலுங் களிதூங்க
விரியொளிக் கதிர்வீசலாற்
கொன்பூத்த பெருமானை யணைதலால் வேளெனுங்
குழகற்கு மகிழ்செய்தலாற்
கோமளப் பெண்செய்கை நின்செய்கை போலுமாற்
கூர்ந்துணரின் இவளையன்றி

அன்பூற் றெடுப்பவிளை யாடுதுணை வேறில்லை
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ யாடவாவே.

அமுதாம்பிகைக்குப் பொருந்துங்கால்: பொன் - பொற்கட்டி. வனம் மரவங்கள் - மிகுதியாகிய குங்கும மரங்கள். வனம் - காடு. இங்கு மிகுதி யென்னும் பொருளில் வந்தது. மால் அரி - பெரிய சிங்கம். களிறு இனம் - யானைக் கூட்டம். மலைவாய் - இமயமலை இடம். பொன் அம் சிலம்பு - பொன்னாற் செய்யப்பட்ட அழகிய சிலம்புகள். சிலம்பு - ஒலியுள்ள ஒருவகைக் காலணி. அடி - கால். புலம்பு உற சூழ்தல் - ஒலித்தலுற வளைந்திருத்தல். புலம்பு - முதனிலைத் தொழிற் பெயர். மிடையும் அங்கம் மலம் அயர - (ஆன்மாக்களை) நெருங்கி யிருக்குங் களங்கமாகிய ஆணவ மலம் சோர்வடைய. குவலயம் - உலகம். களிதூங்க - மகிழ்ந்திருக்க. ஒளிக் கதிர் - அறிவு (ஞான) ஒளி. பெருமான் - பெருமையை யுடையவனாகிய சிவபெருமான். வேள் எனும் குழகன் - வேளென்னும் பெயரையுடைய முருகன். **சந்திரனுக்குப் பொருந்துங்கால்:** பொன் - திருமகள். பொன் நிறமுமாம். வனம் - அழகிய வர்ணமுமாம். மரவங்கள் - கற்பக மரங்கள். மால் அரி - பெரிய உச்சைச் சிரவமாகிய குதிரை. களிறு இனம் - களிற்று மீனினங்கள். அலைவாய் - கடலிடம். பொன் அம் சிலம்பு அடி - அழகிய மேருமலையின் அடிவாரம். புலம்பு உற சூழ்தல் - வருத்தமுறச் சூழ்ந்து வரல். மிடையும் அம் கமலம் அயர - நெருங்கி யிருக்கின்ற அழகிய தாமரைகள் தளர (குவிதல்). குவலயம் - குவளை மலர்கள். ஒளிக் கதிர் - ஒளியாகிய வெளிச்சம். பெருமான் - பெரிய (களங்கமாகிய) மான். வேள் எனும் குழகன் - வேளென்னும் இளமைப் பருவமுடைய மதன். வேள் - விரும்பத் தகுந்தவன், விருப்பத்தைச் செய்பவன். (௬௫)

மண்டலம் புகழாத வன்படுஞ் செவ்வியின்
மாண்டவரை உச்சிமீது
வயங்கிய கரஞ்சேர்த்தி ஆணவ இருட்குழாம்
மாற்றிநற் பசுமென்பயிர்
கண்டக மகிழ்ந்துநெடு வானுற விளைந்தொளி
கலந்தமணி கான்றகதிர்நீள்
கடிநாறு தன்னடி வணங்கவெளி வந்துதெண்
கடலுலக முற்றுமேத்த

விண்டல நெருங்குமீன் கணமாதர் புடைசூழ
மேவியுல கந்தனதியல்
வீறுபெற நோக்கினுல் ஈரெண் கலைப்பொலிவும்
மெய்ம்மையிற் காட்டுமுறையால்
அண்டர்தொழும் எம்மையாள் அம்மையை நிகர்ப்பைநீ
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

அமுதாம்பிகைக்குப் பொருத்துங்கால்: *மண்டலம் புகழாத வன்பு அடும் செவ்வியில் - உலகம் துதிக்கப் பெருத (இயற்கை மலத்தின், ஆணவத்தின்) வலிமையை அடக்கற்குரிய காலத்தில், மாண்டதவரை உச்சிமீது வயங்கிய கரம் சேர்த்தி - மாட்சிமை யுடைய தவத்தினர்க்குத் தலையின்மேல் விளங்கிய கையைக்குவித்து வைத்து. அத்தமத்தகசையோகக் குறி. ஆணவ இருட்குழாம் மாற்றி - ஆணவமாகிய இருட் கூட்டத்தை யொழித்து. 'இருள் சேர் இருவினை' என்னுங் குறளடியை நோக்க. நல் பசு மெல் பயிர் கண்டு அகம் மகிழ்ந்து நெடுவான் உற - நல்ல வுயிர்களாகிய மெல் லிய பயிர்கள் கண்டு உள் மகிழ்ந்து உயர்ந்த பெருமையாகிய கதியை யடைய. விளைந்து ஒளி கலந்த மணிகான்ற கதிர் நீள் கடி நாறு தன் அடி வணங்க எளி வந்து - உண்டாய் ஒளி பொருந் திய மணிகள் கக்கின விளக்க மிக்க மண முண்டாகின்ற தன் னடியை வணங்க எளிதாக வந்தருளி. மீன் கண் அம்மாதர் புடை சூழ மேவி - மீன்போலும் அழகிய கண்களை யுடைய விண்மாதர் அருகே சூழ்ந்திருக்க. ஈர் எணகலைப் பொலிவும் மெய்ம்மையில் காட்டும் முறையால் - பதினறு கலைகளின் விளக்கத்தையும் உண் மையிற் காட்டுகின்ற முறைமையால் என்க. நோக்கினுல் ஈரெண் கலை என்பதை நோக்கின் + நால் ஈர எணகலை எனக்கொண்டு அறு பத்து நான்குகலை எனக் கூறுவாரு முளர். அது பொருந்தாது. பதி னறு கலைகளா மாற்றை, அகாரம், உகாரம், மகாரம், விந்து, அரைத் திங்கள், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபிநி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை என்றறிக.*

சந்திரனுக்குப் பொருத்துங்கால்: *ஆதவன் படும் செவ்வியில்- சூரியன் பாடு சாயும் வேளையில், மாண்டவரை உச்சிமீது வயங்கிய கரம் சேர்த்தி - மாட்சிமை பொருந்திய உதயமலை முடிமேல் விளங் கிய (கிரணங்களாகிய) கைகளைப் பொருத்தி. ஆணவம் இருள் குழாம் மாற்றி - இயற்கையாகிய (ஆணவ மலத்திற் கொப்பாகிய) இருட்டொகுதியை யொழித்து, பசு மெல்பயிர்வான் உற விளைந்து*

மணிகான்ற கதிர்-பசிய மெல்லிய பயிர்கள் வானத்திற் பொருந்த விளைந்து (நீண்டு) மணிகளைக் கக்கிய நெற்பயிர்கள். கடிநாறு தன் அடி வணங்க வெளிவந்து - விளக்கந் தோன்றும் தன் கால்களை வணங்குதற்கு விண்ணிற் றேன்றி, மீன்கணம்மாதர் புடைசூழ மேவி - நட்சத்திரக் கூட்டங்களாகிய பெண்கள் பக்கங்களில் சூழ விருந்து. ஈர் எண்கலை பொலிவு - பதினறு கலைகளின் ஒளி. நெற் கதிர்களில் மணியுண்டென்பதை 'தழைத்துக் கழுத்து வளைந்த மணிக்கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக் குளிர்முத்தினுக்கு விலையுண்டு' எனவரும் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழாலும், திருவிளையாடற் புராணம் மாணிக்கம்விற்ற படலத்தாலு முணர்க. (௬௬)

கங்கையும் பாந்தளும் தும்பையும் செம்பொற்
கடுக்கைச் செழுந்தொடையலும்
கபாலமும் கொக்கிறகும் ஊற்றிருந் தொழுகுதேங்
கமழ்ந்தபூ மத்தமுநறும்
கொங்குதவழ் ஆத்தியும் வன்னியும் எருக்கும்
குளிர்ந்தவறு கம்புல்லுமேற்
கோமளப் புலவோர் இறைக்குமந் தாரமும்
கொய்துதவர் தூற்றுமலரும்
தங்கிய பிரான்சடைக் காட்டினில் உனக்குரிமை
சற்றலால் வேறுமுண்டோ
தாவிலெண் ணன்கவய வத்திலும் செம்பாதி
தனதெனக் கொண்டுவாழும்
அங்கவள் நினக்கதிகம் என்பதற் கையமிலை
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

பாந்தள் - பாம்பு. கடுக்கை - கொன்றை. தொடையல்-மாலை. மத்தம் - ஊமத்தை. கொங்கு - தேன். கோமளம் - அழகு. புலவோர் - இமையவர். பிரான் - சிவன். சற்று - கொஞ்சம். தாஇல்-கெடுதல் இல்லாத. செம்பாதி - சரிபாதி. தனது-தனக்குரியது. திங்கட்கு இறைவன் சடையில் கொஞ்ச இடமே உரியது. அவ்வாறன்றி அவனங்கங்கள் முப்பத்திரண்டிலும் சரிபாதி இறைவிக்குண்டு எனக்கொள்க. மற்ற கங்கை முதலாகச் சொல்லப்பட்டவற்றிற்கும் அவை தங்கியிருக்கும் சிறிய இடங்களே அவைகளுக்குமுரிய எனக்கொள்க. (௬௭)

உருநிறை உவாத்தோறும் வாக்குநின் அமிழ்துண்ட
உம்பர்த் தலத்தின்இமையோர்
உவாக்கடல் உயிர்த்தவிடம் முன்னிற்ற லாற்றற்கும்
ஒல்கினர்கள் சாவாதிரார்
குருநிறை மணிக்கச் சணிந்தஇவள் பவளவாய்க்
கொழியமுதம் வாய்மடுத்த
கோமளச் சோமேசர் விடமயின் றுற்றலும்
கொண்டனர் இறத்தலிலர்மற்
றிருள்நிறை இராவினை விளைத்தியிவள் உள்நிறையும்
இருளிரா வினைமுழுவதும்
இரித்திடுவள் ஆதலால் இவளொடும் பொன்னோ
டிரும்பனையை மன்றவரிபாய்
அருள்நிறை கடைக்கண்வைத் தெம்மையாள் அம்மையுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

உருநிறை உவா - முழுத்திங்களின் நாள்: அது பூரணை. வாக்குதல் - சிந்துதல். உம்பர்த்தலம் - மேலிடம். உயிர்த்த - பெற்ற. ஒல்கினர்கள் - துவண்டார்கள். நஞ்சு கண்டு வருந்தினர் என்க. குரு - நிறம். கச்சு - வார்ப்பட்டை. கொழித்தல் - தெளித்தெடுத்தல். மடுத்த - உண்ட. ஆற்றல் வன்மை. இருள் - கருமை. விளைத்தி - உண்டாக்குகின்றாய். உள்நிறையும் இருள் - அஞ்ஞான இருள். இரித்தல் - ஓட்டல். இறைவியுடன் திங்களே! நீ பொன்னுடன் இரும்பனையை என்றமை நோக்கற்பாலாது. (௬௮)

தெளிக்குமெய் யன்பினால் வழிபட்ட நாளுனது
செல்லனோய் தவிர்த்தளித்த
திருச்சோம நாதனார் உண்டருளும் நஞ்சும்
சினந்தவிர்ந் துள்ளொடுங்கத்
துளிக்குமெழில் அங்கைத் தலத்தில் தடுத்திட்ட
சுவையமிழ் திருப்பவமிழ்தம்
துணைக்கரத் தேந்திப் பசிப்பிணி தெறத்தினந்
துயருழந் துழல்வோரெனக்
களிக்குமுறை தேற்றுது வாளரா உண்டுண்டு
கக்கத் திகைத்துவெருவிக்

ககனவெளி ஓடியும் வடகுவடு சுற்றியும்
கவலுநின் செய்கைநன்றே
அளிக்குலம் இறைக்கும் கடிக்குழற் கன்னியுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

செல்லல் - வருத்தம். நோய் - கயநோய் (கொடுமையுள்ளது). நஞ்சு - விடம். உள் ஒடுங்க - தன் வலியற்றுக் கழுத்தில் அடங்கியிருக்க. துளிக்கும் எழில் - மிக்க அழகு. துளித்தல் - சிந்துதல். மிகுதியிருப்பின் சிந்தற்கியையும், ஆயின் மிக்கு என்க. சுவை அமிழ்து - அமுதாம்பிகை தெற - ஒழிப. வாள் அரா - ஒளியுள்ள ராகுவென்னும் பாம்பு. 'மதியுணும் ராகுநாமம்' என்பதாலறிக. கக்குதல் - எதிரெடுத்தல். ககன வெளி - விண்வெளி வடகுவடு - மேருமலை. கவலும் - வருந்தும். (௬௧)

வணங்குமுறை யாற்றனது திருவுளப் படிநிற்கும்
மாந்தர்க்கு மலதிரோத
மாயேய காமிய மருட்பிணி அவிழ்த்துநான்
மறைமுடிவும் எட்டாததோர்
குணங்குறி கடந்தபே ரானந்த வெள்ளக்
கொழுங்கடல் திளைத்தாடிடக்
கொடுத்தருளும் வள்ளன்மை நிற்கமற் றுலகினும்
குளிர்தூங்க எண்ணுன்கறம்
இணங்குவே தாகம வழித்துறை வழாவகை
இயற்றியது காணுயலை
ஈங்குநீ வரினினது கறைபோக்கி வேண்டியதும்
ஈந்தருள் கொழித்தருளுவாள்
அணங்குகொண் டந்தரத் தலையாதெம் அம்மையுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

வணங்கு முறை - நூலிற்கூறப்பட்டிருக்கின்ற விதிமுறையைக் குறிக்கின்றது. மாந்தர் - உயிர்கள். மலதிரோதம் - திரோதமலம். இது போகத்திலழுத்துவது. மாயேயம் - தநுகரண புவனபோகங்கள். மருட்பிணி - மயக்கமாகிய நோய். பேரானந்த வெள்ளக் கொழுங்கடல் - சிவபெருமான். திளைத்தாடுதல் - முழுகல். அம்மை

திருவுளப்படி நீற்கு மாந்தர்க்கு அவிழ்ந்துக் கடல் ஆட்டக் கொடுத்தருளும் வள்ளற்றன்மையுடன் எண்ணுன் கறமும் இயற்றியவ ளாகலின் நீ வரினும் உன்கறை போக்கி உனக்கு வேண்டியவற்றை யும் ஈவள் என்க. காணுபலே - பாராமலிருக்கவில்லை. கறை - களங்கம். அணங்கு - துன்பம் (எ0)

குடங்கைமல ராற்செம்பொன் மேருவைத் தனுவெனக்
கோட்டிய மலைக்குமருகன்
கோமளச் சிலைமார்பு மைந்தனை இரட்டித்த
குலவுப் புயக்குவடுமேல்
வடங்கதுவு மோட்டிளங் கோங்கினும் வண்டினும்
மலங்கக் குழைத்தவள்நினை
வருகென் றழைத்திடவும் மதியா திருத்தியிவள்
வன்கதக் கனலிதோய்ந்த
தடங்கட் கொடும்படைச் செய்யசுடர் வேல்கொண்டு
தாக்கினுயிர் பொன்றிவிடுதல்
சரதமற் றெங்கெங் கொளிப்புறினும் இவளிலாத்
தானமொன் றில்லைகண்டாய்
அடங்கிய தடங்கமல நெஞ்சா தனத்திருவொ
டம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

குடங்கை - உள்ளங்கை. தனு - வில். கோட்டுதல் - வளைத்தல். மலைக்கு மருகன் - சிவபெருமான். கோமளம் - அழகு. கோங்கு - கோங்கரும்பு. ஈண்டு முலைக்காயிற்று. வண்டு - வளையல். மலங்குதல் - கலங்குதல். மதியாது இருத்தி - பொருட்படுத்தாமலிருக்கிறாய். கதக்கனலி - சினத்தீ. தாக்குதல் - மோதுதல். பொன்றிவிடுதல் - சாதல். சரதம் - உண்மை. தானம் - இடம். எங்கு நிறை இறைவனுடனிருப்பதால் இவளில்லாத இடம் இல்லை என்றபடி. (எக)

துடிபட்ட கைத்தலத் தெம்பிரான் மகிழ்தருஞ்
சுந்தரப் பெண்ணமிழ்தெனத்
தோன்றும் பிராட்டியைமுன் எண்ணுத தக்கனார்
துயர்கூர்ந்து பட்டபாட்டை
முடிபட்ட வானவர் குழாத்தோடும் உடனின்று
முழுவதும் பட்டறிதியிம்

மொய்குழற் செல்விதனை அவமதித் தின்றுநீ
முன்னுறா தகன்றொழிவையேற்
கடிபட்ட இதழ்தின்று கறுவினன் நின்னிலைமை
கடிபட்டு மாழ்குவையலாற்
கலைமுழு மதித்தே வெனும்பழைய பெயரொடுங்
கலைமதி யிலாததேவென்
றடிபட்ட பாவிற் புதுப்பெயரும் ஆளுவாய்
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

துடி - உடுக்கை. தோன்றுதல் - காணப்படுதல். பட்டபாடு - அடைந்த துன்பம். முடிபடுதல் - முடிகெடுதல். மொய்குழல் செல்வி - இறைவி. முன்வராது - அவளிடம் வராமல். அகலுதல் - நீங்குதல். கடி - மணம். கறுவினால் - சினந்தால். கடிபட்டு - கடிதலையடைந்து. மாழ்குவை - மயங்குவாய். கலைமதி - நூலறிவு. பா - புலவர் பாடும் பாட்டு. அடி - யாப்பின் ஒரு உறுப்பு. (௭௨)

சங்கையா னங்கையிவள் எம்பிரான் புலவியில்
தடங்கருங் கட்கடைநுதி
சற்றே கறுப்புழித் தாமரைச் சீறடிகள்
தாக்குங் கடுந்தொழிலினாற்
கங்கையா டித்துடித் திவள்கருணை யாற்றினைக்
கைகூப்பும் இறையேந்துமான்
கதறிவிழி மானைத் தொழுந்தொடையல் வண்டெலாங்
கருங்குழல் தாவுமரவம்
மங்கையா டாதபைப் பாந்தளைக் காவென்று
வாவுமற் றுங்குநீயும்
வாணுதல் மதிக்கிறைஞ் சிடுவையன் றேயதனை
மதியாத தென்னைகொலெமக்
கங்கையா மலகமென அன்புகூர் அம்மையுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

சங்கை - ஐயம். புலவி - ஊடல். நுதி - நுனி. கறுப்புழி - சினந்தால். சீறடி - சிறிய அடி. நங்கை - உமாதேவி. கை கூப்பு

தல் - கை கூம்புதல் : கும்பிடுதல். ஏந்துதல் - பிடித்தல். விழி மான் - கண்ணாகிய மான். ஆடாத பைப்பாந்தள் - அல்குல். இறைஞ்சிடுவை - வணங்குவாய். அங்கை ஆமலகம் என் - உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெளிப்படையாக. எம்பிரான் கை கூப்பும், மான் தொழும், வண்டுதாவும், அரவம் வாவும் அவற்றைப்போல நீயும் வணங்குவாய் என இயைக்க. (எங)

கைப்போது நீட்டிமுன் விரித்துனை அழைப்பவும்
காணாதி போல்வந்திலாக்
காரணத் தாலம்மை சீறுதலும் அங்கையைக்
கரும்பாந்தள் என்றஞ்சினான்
இப்போது தாழ்க்கலான் வருவனென் றிதுகாறும்
இவ்வாறு தப்புவித்தோம்
இன்னுநீ வாராது மத்தரின் திரிதியேல்
இனியுனக் கேதுபுகலோ
செப்போது கொங்கைப் பிராட்டியிவள் சோமேசர்
செங்கண் புதைத்தஞான்று
தினகரச் செல்வனொ டழுங்கித் திகைத்தநின்
திறமறந் தனைபோலுமால்
அப்போது பட்டதை நினைந்துமற் றிவளுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுவள ருங்குளத் தாரமுத வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே.

காணாதி - பாராமலிருப்பவன். சீறுதல் - சினத்தல். கரும்பாந்தள் - கரும் பாம்பு. இஃது இராகுக்கோளைக் குறிக்கின்றது. "மதியுணுமிராகு நாமம் மற்றது சமங்கரும்பாம்" "இராகுக்கோளே கரும்பாம் பாகும்" என்பவை நிகண்டு திவாகரங்கள். தாழ்க்கலான் - பொறுக்கமாட்டான். மத்தரின் - உன்மத்தர்களைப்போல. புகல் - தஞ்சம்; அடைக்கலம். ஞான்று - காலம். தினகரச் செல்வன் - சூரியன். பட்டது - அடைந்தது (துன்பம்). இப்பருவத்தில் இரண்டுபாடலில் சாமமும், இரண்டில் பேதமும் அடுத்த இரண்டில் தானமும், மற்ற நான்கில் தண்டமும் கூறினர். (எச)

அ. அம்மானைப்பருவம்

பதினேழாந் திங்களில் நிகழ்வது. இது பிள்ளையைப் பார்த்துத் தோழிகள் முத்தம்மானை முதலிய அம்மானைகளை எடுத்து ஆடியருளும்படி கூறல்.

வம்பியல் தொடைக்கூந்தல் மீமிசைக் கதிர்வீச
வாள்பட்ட கோற்றொடிக்கை
மலரினைக் கண்டுசில அண்டத்து மதியங்கள்
வனசமி தெனுங்கருத்தாற்
பம்பியடர் இருள்கண்டு முகிழாமை யாற்றமைப்
பரிசித்தல் வேட்டதாகப்
பாவித் துறுந்தொறுந் தன்றுணைமை அன்மையாற்
பங்கயம் விதிர்த்துவெருளா
வெம்பியகல் வானத் தெழுந்தோ டிடத்தள்ளி
விடலெனச் செங்கைகளால்
வேலினை இகந்தொருவி வார்தரு கொடும்புருவ
வில்லொடு கிடந்துமிளிரும்
அம்பியல் தடங்கணொளி கொண்டிலவு நித்திலத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
அம்மானை ஆடியருளே.

வம்பு - மணம். தொடை - மாலை. மீமிசை - மேல். வாள் - ஒளி. கோல் - வளைவு. வனசம் - தாமரை. பம்புதல் - பரவுதல். அடர்தல் - நிறைதல். முகிழாமையால் - மூடாமையால். கூந்தலொளி ஈண்டு இருள் எனப்பட்டது. பரிசித்தல் - அணைதல். தன் துணைமை - தன்னுடைய தலைவனாகிய சூரியனுடைய தன்மை. விதிர்த்தல் - நடுங்கல். வெருளா - பயந்து; செய்யா என்னும் வாய்பாடு. தடங்கண் - இறைவி; அன்மொழித்தொகை. இச்செய்யுள் முத்தம்மனையைக் குறித்தது. அவற்றைத் திங்கள்களாகக் கொள்க.

இருள்பூத்த நெறிசுரி கருங்குழல் அரம்பையர்கள்
எண்ணிலார் கவரிவீச
எறிசுடர் மணித்தவிசு வீற்றிருந் தரசுபுரி
யேந்தல்குல வரைகளோடும்
தெருள்பூத்த நந்தைசிற கீர்த்தமை குறித்துச்
செயிர்த்தவனை அண்டமுகடும்

தெறிபடக் கைக்கொண் டெறிந்தோச்சி மீளத்
திகைத்துவீழ் தோறுமுன் றன்
மருள்பூத்த வெகுளிதணி யாமையாற் பின்னரும்
வன்கண்மை கொண்டோச்சல்போல்
மருங்குசூழ் தோழியர்தம் இணைவிழியின் நீழலை
மரீஇச்சுலவி ஓடி ஆட
அருள்பூத்த கைகளால் ஒளிபூத்த மரகதத்
தம்மானை ஆடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
அம்மானை ஆடியருளே.

அரம்பையர்கள் - தேவப் பெண்கள். ஏந்தல் - தேவேந்திரன். நுந்தை - பனிமலை. சிறகு ஈர்த்தமை - சிறகரிந்தமை. அவனை - அத்தேவேந்திரனை. ஓச்சுதல் - எறிதல். வன்கண்மை - கொடுமை. இந்திரன் மலைகளின் சிறகரிந்தமையான் அவனைமேல் எறிந்தது போற்கூறும் நயத்தை இதில் நோக்குக. இது மரகதத் தம்மானை. இந்திரனை மரகதத் தம்மானையாகவும், அவனதுடற்கண்களைத் தோழியர்கள் கண்களாகவும் பொருத்துக. (௭௬)

ஒழுங்குபடும் அண்டகோ டிகள்தொறும் நிலாவுறாஉம்
ஒண்கமல மாநிதிகளும்
ஒலிகொண்ட வெண்சங்க நிதிகளும் சார்ந்தவர்க்
குதவுநின் கரநோக்கிவான்
செழுங்கதியும் உய்த்தளித் திடுநிதியம் ஈதெனத்
தேர்ந்துவந் தளவளாவித்
திருவாய்ந்து விடைகொண்டு தம்பதி குறித்துமேற்
சேண்வழி நடத்தலேய்ப்பக்
கொழுங்கதிர் பரப்பிக் கவின்றசெம் மணியாற்
குயிற்றுமம் மனைகள்பலவும்
குளிர்நிலாக் கான்றுவெள் ளொளிவீசு முத்தங்
கொழிக்குமம் மனைகள்பலவும்
அழுங்குமணி மேகலைச் சிற்றிடை யெடுத்தெடுத்
தம்மானை ஆடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
அம்மானை ஆடியருளே.

ஒழுங்கு படல் - வரிசையாதல். சார்ந்தவர்க்கு - உன்னை யடைந்தவர்க்கு. வான் - பெருமை. ஈது - இந்தக்கை. தேருதல் - தெளிதல். அளவளாவுதல் - கலத்தல். திரு - அச்செல்வம். சேண் வழி - ஆகாய வழி. ஏய்ப்ப - ஒப்ப. அழுங்குதல் - அழுந்துதல். சிற்றிடை - இறைவி: அன்மொழித் தொகை. பதுமநிதி - தாமரை வடிவமுள்ளது. சங்கநிதி-சங்கு வடிவமுள்ளது. பத்மநிதி: செம்மை. சங்கநிதி: வெண்மை. இவ்விரு நிதிகளும் இறைவியிடம் வந்து வரம் பெற்று மேல்நோக்கிப் போவனபோல மாணிக்க அம்மனைகளையும் முத்தம்மனைகளையும் ஆடுதல் என இயைக்க. (எள)

தேங்கலுழி யூற்றெடுத் தோடும் போருகச்
செல்வமட வாரிருவரும்
திங்களைக் கண்டினி யிருக்கினெமை நந்தவிசு
சிறைசெயும் எனக்கவன்று
பூங்கமலம் விட்டொரீஇத் தங்கொழுநர் பதியுறப்
போமிடைத் திரும்பிநோக்கிப்
புகழ்ந்திவை மதிக்குமுன் முகிழாமை தேர்ந்துளம்
பூரித்து வருவதேய்ப்பத்
தோங்கனியு மும்மலத் தாகளீர்க்கு நின்முகம்
சுடர்பூப்ப அங்கையேந்தித்
துரிசற்ற பவளத் திழைத்தனவும் நித்திலத்
தொகையிற் குயிற்றியனவும்
ஆங்கமணி வால்வளை தழங்கிட எடுத்தெடுத்
தம்மானை ஆடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
அம்மானை ஆடியருளே.

தேங்கலுழி - தேன்பெருக்கு. அம்போருகச் செல்வமடவார் இருவர் என்றது, திருமகளையும், கலைமகளையும். ஆகலின் அம் போருகம் இருவகைத் தாமரையுமாம். தவிசு - இருவகைத் தாமரைகளாகிய ஆசனம். கவன்று - கவலை யடைந்து. ஒரீஇ - நீங்கி. கொழுநர் - சூரிய சந்திரர். இவை - இந்தக் கைகள். தோம் - குற்றம். மும்மலத்தாகள் - ஆணவம், கன்மம், மாயைகளாகிய தாள். துரிசு - குற்றம். குயிற்றுதல் - செய்தல். ஆங்க - அசை நிலை. (எஅ)

புத்தமிழ் தாகுத்துமணி மோலியங் கடவுளர்
புரைப்பசிப் பிணிதவிர்த்துப்
பூதல மருங்கினும் பைங்கூழ்த் தொகுப்பெலாம்
பூரிப்ப மாந்தர்முகனும்

சித்தமு மலர்ந்துகளி கூரச் செழுங்கலைத்
திங்கதிர் பரப்பியுலவுந்
திங்கட் பிரான்செந் துவர்க்கொடி படர்ந்தவெண்
திரைமுகட் டெழுகாலையும்
தத்தலை விரிக்குங் குடாதுகட லுட்புகுஞ்
சமயத்தி னுஞ்சேத்தல்போல்
தடங்கையில் எடுத்தெறியும் எல்லையினும் மற்றது
தடங்கையிற் புகுபோழ்தினும்
அத்தமுமிழ் சேயொளி கவர்ந்தொளிரு நித்திலத்
தம்மானை ஆடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
அம்மானை ஆடியருளே.

புத்தமிழ்து - புது அமிழ்து. உகுத்து - சிந்தி. புரை - குற்றம். பைங்கூழ்-பசுமையாகிய பயிர். குடாதுகடல் மேற்கடல். சேத்தல்- சிவத்தல். எல்லை - போழ்து. அத்தம் - அம்பிகையை. சிலர்கை யெனவுங் கூறுவர். திங்கள் தோன்றுங் காலத்தும், மறையுங் காலத்தும் சிவந்திருக்கு மியற்கையை யுணர்க. (௭௧)

மருள்கான்ற நெஞ்சச் சழக்கைத் தடிந்தின்ப
வான்கதி கொடுக்குநின்கை
வயங்குபொற் கடகத் திருங்கவின் முகந்துமலர்
வள்ளலை நிகர்த்துவிழியின்
இருள்கான்ற நீலங் கவர்ந்தராப் பாயலிடை
யேந்தலை நிகர்த்துநுதலின்
இட்டசிந் துரவெழில் கவர்ந்துநின் கொண்கரை
யிணைந்துமேற் போந்துலாவித்
தெருள்கான் றெவற்றினுந் தோய்வற்று நின்றவச்
சிற்பரம் பொருளையொத்துச்
சேணுடர் கொண்டாட ஆடச் செழுங்கருணை
தேக்கிநிறை சோமேசனார்
அருள்கான்ற கண்கனி பயப்பமணி நித்திலத்
தம்மானை ஆடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
அம்மானை ஆடியருளே.

மருள்-மயக்கம். சழக்கு - அறியாமை. தடிதல் - கொல்லுதல். வான்கதி - உயர்பதவி ; வீடுமாம். இருங்கவின் - மிக்க அழகு. நீலம் - கருமை நிறம். அராப்பாயல் - பாம்புப்பாய். எந்தல் - திருமால். இணைந்து - ஒத்து. சேணுடர் - இமையவர். மேற்போகுங் காலத்தில் முத்துமணி தன்னிறமான வெண்ணிறங்காட்டி யிருந்த லாற் சிற்பரம் பொருளை யொத்து என்றார். முகந்து நிகர்த்து இணைந்து ஒத்து ஆட ஆடியருளெனப் பொருத்துக. ஈண்டு, மும் மூர்த்திகளுக்கு நிறமும் சிவத்தினிறமு மறிக. (அ0)

வேறு

முத்த மிழைத்தன வும்பவ ளத்திரள்
மொய்த்தன வுங்கலைகள்
முற்றும் நிறைந்த பசுங்கிர ணச்செழு
முழுமதி ஆமெனவும்
எத்திசை யுங்கதிர் கான்றிருள் சீத்தெழும்
என்றாழ் ஆமெனவும்
எண்ணி உணற்கெழு மூன்று ளராவும்
இருஞ்சிறை நேமியுநின்
உத்தி முலைக்கும் இடைக்கும் மிடைந்தயல்
ஓடவும் வெம்பசியால்
உயங்கு சகோரம் மயங்கி உடன்திரி
வுற்று வருந்தவுமென்
அத்தன் உளத்தின் நடிக்கும் மடப்பிடி
ஆடுக அம்மனையே
அரந்தை துரந்து குளிர்ந்தை புரந்தவள்
ஆடுக அம்மனையே.

முத்த மிழைத்த அம்மனை...முழுமதியா மெனவும், பவளத் தம்மனை...என்றாழா மெனவும் கூட்டுக கலைகள் முற்று நிறைதல்- எல்லாக் கலைகளுடனுங் கூடியிருத்தல். கான்று - வீசி. சீத்து - துடைத்து. என்றாழ் - சூரியன். மூன்று என்றது - பாம்பு, சக்கரவாகம், சகோரம். பாம்பு சூரிய சந்திரர்களை யுண்பது. சக்கர வாகம் சூரிய கிரணத்தை யுண்பது. சகோரம் சந்திர கிரணத்தை யுண்பது. உத்தி - சுணங்கு, தேமல். சக்கரவாகம் முலைக்கும், பாம்பு இடைக்கும் இடைந்தயலோட வெனவியைக்க. திரிவுறல் - சுழலல். அரந்தை - துன்பம். (அக)

வடங்கெழு கொங்கை நிகர்ப்ப வளர்ந்த
வடாது பொருப்பினைநின்
மகிழ்நர் கரத்தினின் இன்னும் வளைத்திடு
மாறொரு சூழ்ச்சியினைந்
துடங்கழி மூன்று புரங்களை மீண்டும்
உலாவ எழுப்பிவரம்
உதவி வெளிக்கண் விடுத்தல் கடுத்திட
ஒள்ளொளி முத்தினுமோர்
முடங்கல் உறுதொளிர் நீல மயத்தினும்
மொய்த்த பசும்பொனினும்
முற்ற அமைத்து விடுத்தருள் அம்மனை
மூன்றும்விண் மீதுலவ
அடங்கிய அன்பர் உளங்குடி கொண்டவள்
ஆடுக அம்மனையே
அரந்தை துரந்து குளந்தை புரந்தவள்
ஆடுக அம்மனையே.

வடம் - மணிவடம். வடாது பொருப்பு - வடக்குள்ள மலை, மேருமலை. நின் மகிழ்நர் - சிவபெருமான். உடங்கழி - ஒருங்கே அழிந்த. முப்புரங்களைப்பற்றிக் காஞ்சிப் புராணம் கயிலாயப் படலத்திலுணர்க. கடுத்திட - ஒப்ப. ஓர்முடங்கல் உறாது - அழகு கெடுதலில்லாமல். விண்மீது - ஆகாயத்தில். உலவ - சஞ்சரிக்க. முத்தினாலும், நீலத்தினாலும், பொன்னினாலும் செய்யப்பட்ட மூன்று அம்மனைகளும் வெள்ளிக்கோட்டையையும் இரும்புக் கோட்டையையும் பொன்கோட்டையையும் ஒப்பனவாகக் கொள்க. (அஉ)

உய்ய வரந்தரு நித்தன் முகத்தில்
உயங்க முனைந்தகையும்
ஒண்கர மின்னும் ஒறுத்த வுருத்தற
வாடி நயப்பமெனு
வெய்ய நெருப்பெழு செங்கதி ருங்குளிர்
வீசு பனிக்கதிரும்
மேவி அகங்கையி னேடுறா கேண்மை
விளைத்துவிண் ஏகுதல்போற்

செய்ய மணிப்பவ ளத்தின் இழைத்த
செழுந்திரள் அம்மனையுந்
தெள்ளிய முத்தின் இழைத்த கதிர்க்குவை
சிந்திய அம்மனையும்
ஐய நுசுப்பொசி யத்தளிர் அங்கையின்
ஆடுக அம்மனையே
அரந்தை துரந்து குளந்தை புரந்தவள்
ஆடுக அம்மனையே.

உயங்க - அசைய. தகையும் - தடுக்கும். இன்னும் ஒருத்தல் உறுது - இன்னும் வருத்துவதைப் பொருந்தாமல். நயப்பம - மகிழ்வோம். கேண்மை - நட்பு. ஐயம் நுசுப்பு - உண்டோ இல்லையோ என்று ஐயப்படற்குரிய இடை. ஒசிதல் - துவளல்.

சூரிய சந்திரர்கள் முன் அம்மையார் இறைவன் கண்களை மூடிய காலத்தில் வருந்தினமைபோல மீண்டும் நேரா வண்ணம் அவ்வம்மையாரின் கையுடன் உறவாடிக்கொள்வோமென்றெண்ணி நட்புப் பெற்றுப் போவனபோல் பவள அம்மனையையும், முத்தம்மனையையும் இறைவி ஆடினாள் என்றறிக. (௮௬)

கதிருமிழ் நீல மணித்திரள் மொய்த்த
கருஞ்சுடர் அம்மனைநின்
கட்படை யாலடி யார்மலம் ஓடல்
கடுப்ப எழுந்துலவ
முதிரொளி துற்ற செழும்பவ ளத்திரள்
முற்றிய அம்மனையம்
மும்மலம் வென்ற திறற்பிர தாபம்
முளைத்தெழல் ஒத்தெழவெண்
மதிநிகர் முத்தம் நிரைத்து வனைந்தவம்
மானை யதன்பிறகே
வயங்கிய கீர்த்தி திரண்டெழு கின்றது
மான எழுந்துலவ
அதிர்வளை அங்கையி னலமு தாம்பிகை
ஆடுக அம்மனையே
அரந்தை துரந்து குளந்தை புரந்தவள்
ஆடுக அம்மனையே.

கண்படை - கண்ணுகிய போர்க்கருவி. மலம் - மும்மலம். ஓடல் கடுப்ப - ஓடிப்போய் விடுவதைப்போல. துறுதல் - நிறைதல். மூற்றிய - வளர்ந்த. பிரதாபம் - வீரம். வயங்குதல் - விளங்குதல். மான - ஒப்ப. அதிர்வளை - ஒலிக்கின்ற வளையல். (அசு)

அ. நீராடற்பருவம்

பத்தொன்பதாந் திங்களில் நிகழ்வது. இது பிள்ளையை நோக்கித் தோழியர்கள் ஆற்று வெள்ள நீராட வேண்டிக்கூறுதல்.

தேங்கிய செழுங்கலைத் திங்களுக் கருள்செய்த
செல்வர்முடி மீதுதானும்
திளைத்தாடும் உரிமையால் திளைத்தாடு வோர்க்கெலாந்
தீப்பிணிப் பவந்தெறுதலால்
ஓங்கிய கலித்திரைக் கங்கையொன் றேநம்மை
ஒத்ததாம் என்றதனொடும்
உறவாடல் வேட்டெழுந் தாலென்ன விண்ணத்
துயர்ந்துடுக் கூட்டமலைமேல்
தாங்கிய கிளைக்குலங் கான்றமணி யைத்தனது
சாதியென ஒகைகூரத்
தண்கதிர்க் கடவுளொடு செங்கதிரை அண்டத்
தடஞ்சுவர்ப் பிடரினெற்றி
வீங்கிய ஒலிக்கூட்டம் ஈன்றுவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
வெள்ளநீ ராடியருளே.

தான் என்றது, பாலியாற்றை. திளைத்தல் - முழுகுதல். தீப்பிணி - கொடிய நோய். கலி - ஒலி. அதனொடும் - அக் கங்கையோடும். விண்ணத்து உயர்ந்து - ஆகாயத்தின்மேல் கிளம்பியுயர்ந்து. உடுக்கூட்டம் - நட்சத்திரத் தொகுதி. கிளைக்குலம் - மூங்கிற் கூட்டங்கள். உடுக்கூட்டம் ஒகை கூர எனச் சேர்க்க. உறவாடல் வேட்டு எழுந்தாலென்ன உயர்ந்து எற்றி ஒலிக்கூட்டம் ஈன்று வருபாலி நதியென்க. இது பாலாறெனத் தொணடை நாட்டிலுள்ளது. (அகி)

இருகவு ளுடைந்தூற்று பூங்கடாங் கமழ்முகத்
தெறுழ்வலிக் குழூஉக்களிறெலாம்
எழிலிக் குழாத்திற் பெயர்ந்துழி தருஞ்சிகரி
யிடமாதி நான்குமாற்றத்
தருவளன் அடங்கத் தழீஇக்கொண்டு பின்னவை
தளர்ந்துகலி கூராவகை
சாலவெதிர் ஒன்றுக் கனந்தமாப் பெருவளன்
தண்டா தளித்துவரிசூழ்
அருநிலன் இடத்தொருவர் தினையளவை ஆற்றிடினும்
அருளினிலை பெறுவாழ்க்கையோ
டழியாத திருவுமெதிர் ஆங்கவர்க் குதவுநின்
அடியவரை ஒத்துமாக்கள்
வெருவியயல் ஓடத் தழங்கிவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
வெள்ளநீ ராடியருளே.

இருகவுள் - இரண்டு செவியடி கமழ்தல் - வீசுதல். எறுழ்வலி - மிக்கவலி. எழிலி - மேகம். உழிதரல் - சுழலல். சிகரி - மலை. நானிலத்தை நான்கு என்றார். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். ஆற்ற - மிகவும். வளம் - பண்டங்கள். தழீஇக்கொண்டு - வாரிப்பொருந்திக்கொண்டு. அவை என்றது அந்நில நான்கையும். கலி - வறுமை. தண்டாது - ஒழியாமல். உவரி - கடல் (உப்புள்ளது). வெருவி - பயந்து. தழங்குதல் - ஒலித்தல். வளனடங்கத் தழீஇக் கொண்டு அளித்து ஒத்து வருபாலிநதி யெனக்கொள்க. (அசு)

வளைத்தமுப் புரிசைத் தலத்தினின் றயில்கொண்ட
வாளிக்குழாம் எழுதல்போல்
வயங்கிய பசும்பொன் திரட்குவட் டினையும்வல
வாளரித் திரளையுநெடுந்
துளைத்தகை முகக்கடாக் குஞ்சரத் தினையுஞ்
சுழிக்குமச் சுழிமூன்றினுந்
துண்ணென எழுந்தநெட் டுடல்வாளை தெய்வத்
துறைப்புனற் கங்கைநதியில்
திளைத்ததிற நோக்குவார்க் கிப்புனல் படிந்தாடு
செய்தவப் பயனையிந்தத்

திண்பூத பரிணும தேகத்தில் உதவுமா
தீர்த்தமிது வெனவியப்பு
விளைத்துவிண் ணுடும் பழிச்சவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
ளெள்ளநீ ராடியருளே

வளைத்த - சுற்றிய. அயில் - கூர்மை. அரித்திரள் - சிங்கக் கூட்டம். பொற்றிரட் குவட்டினையும், வாளரித்திரளையும், குஞ்சரத்திரளையும் சுழித்தலின் சுழி மூன்றினும் என்றார். இம்மூன்றையும் பொன், வெள்ளி, இரும்பாலாகிய மூன்று மதில்களாகக்கொள்க. துண் - விரைவுக்குறிப்பு. நெட்டுடல் - நீண்டவுடம்பு. புனல் - நீர். பழிக்க - துதிக்க. வெறி - மணம். நறு - தேன். மூன்றுவகைச் சுழியிலுமெழுந்த வாளைமீன்கள் ஆகாய கங்கையிற்றிளைத்த திற நோக்குவோர் இப்பாலிப்புனலிலாடுந் தவப் பயனைப் பூதசாரவுடலாகிய தேகவுடலாலெய்தாமல் பூதபரிணும வுடலிலெய்தவுதவும் மாதீர்த்தம் இதுவென்ன வியப்பு விளைத்து விண்ணுடும் பழிச்சவரும் பாலியென்றியைக்க. இப்பூதசாரதேகம், பூதபரிணும தேகவிரிவுகளைச் சீகாழித்தல புராணம் திருவிழா அத்தியாயத்திற்காண்க. (௮௭)

திரைத்தொலி பரப்பியலை வீசும் பெருங்கடல்
தீம்பயம் பருகிஆர்த்துச்
செல்லினம் எழுந்துநெடு வான்படர்த லூர்தனது
தீர்த்தம் படிந்தாடுநர்
புரைத்தொகை விளக்குமல மாயைகன் மக்குழாம்
பொள்ளென இரிந்தோடலும்
புரையக் கருங்குழற் காட்டுமலர் கூறும்
பொலஞ்சிறைத் தும்பிமுழுதும்
இரைத்துமணி வானத் தெழுந்தோட நீராடும்
ஏந்திளங் கொங்கைமடவார்
ஏறிட்ட மணியணிகள் சிந்திய கரைக்கணின்
இணையடி வருந்தாவகை
விரைத்துணர் நிரம்பப் பரப்பிவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
வெள்ளநீ ராடியருளே.

தீம்பயம் - இனிய நீர். பருகி - குடித்து. ஆர்த்து - ஒலித்து. செல்லினம் - மேகக்கூட்டம். படர்தல் - செல்லுதல். புரைத்தொகை - குற்றக்கூட்டம். பொள் என - விரைவாக. புரைய - ஒப்ப. பொலம் சிறை - பொன்நிறச் சிறகு. தும்பி - வண்டு. மணி வானம்-கரிய ஆகாயம். ஈண்டு மணி கருமைக் காயிற்று. எறிட்ட - கோத்த. விரைத்துணர் - மணமுள்ள பூங்கொத்து. செல்லினம் நெடுவான் படர்தலும், மலமாயை கன்மக்குழாம் இரிந்தோடலும் புரையத்தும்பி முழுதும் இரைத்து மணிவானத் தெழுந்தோட நீராடும் எந்திளங் கொங்கை மடவார் எனக்கூட்டுக. அன்னார் மணி யணிகள் சிந்திய கரையில் உன்னடி வருந்தாவகை விரைத்துணர் பரப்பி வருபாலிநதி என முடிக்க. (அஅ)

கொழுந்தாமம் ஆடவது சுற்றுங் குழற்கற்றை
கூட்டுவிட் டாடவதனிற்
குடிகொண்ட மாதர்ச் சுருப்பினம் முகேரெனக்
குரல்விளைத் தாடவதுசூழ்
செழுந்தா துகுங்கஞ்ச வெள்ளனந் திரையூடு
சேர்ந்தாட அதனருகுநின்
திருமேனி கண்டினம் எனப்பிணி முகக்குலஞ்
சிறைவிரித் தாடவதுபோல்
எழுந்தாடு தெய்வப் பிணாக்குழாங் கண்டுகண்
டின்பநீ ராடவவர்தோள்
இணங்கும் பெரும்புலவர் கைகொட்டி ஆடவெள்
ளீர்ம்புனற் கங்கைபுவிமேல்
விழுந்தாங் கொழுங்குகொண் டாடிவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
வெள்ளநீ ராடியருளே.

கொழுந்தாமம் - செழுமையாகிய மாலை. அது - அம்மாலை. குழற்கற்றை - கூந்தற் கூட்டம். மாதர் - அழகு. சுருப்பு : வலித்தல். முகேர் - ஒலிக் குறிப்பு. ஈண்டு வண்டொலியை யுணர்த்திற்று. இது பொது. இதனை "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக் - கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி" எனத் திருவாசகத் திருவெம்பாவையில் வருவது காண்க. குரல் - ஒலி. அது - அச்சுருப்பினம். பிணிமுகம் - மயில். பிணா - பெண். பெரும் புலவர் - பெரிய தேவர்கள். இன்பநீர் - களித்தலாகிய நீர். புவிமேல் விழுந்தாங்கு - பூமியின்மேல் விழுந்ததுபோல. (அகூ)

வேறு

ஏந்து பிறைவெண் மருப்புறழ்கால்
எழில்கூர் மலைவா ரணத்திரள்கள்
எய்திப் பரவை கலக்குமலை
யெய்ப்பத் துளைந்து விளையாடி
நீந்தி அணைந்து கரையேறி
நிறையுங் களிப்பு மீக்கொண்டு
நிலாவெண் தரளக் குவைபெயர்த்து
நீள்வா ரிதியின் கரைக்கணலை
மாந்து முகிலா லியைச்சொரிந்தா
மானச் சிதறும் பரப்பினிடை
வான்மீன் நடுவண்பலமதியம்
வதிந்தால் நிகர்ப்பச் சங்கினங்கள்
போந்து துயிலும் பாலிநதிப்
புதுநீ ராடி யருளுகவே
பொற்பார் குளந்தை அமுதவல்லி
புதுநீ ராடி யருளுகவே.

எழில் கூர்தல் - அழகு மிகுதல். வாரணத் திரள்கள் - யானைக் கூட்டங்கள். எய்தி - வந்து. பரவை கலக்குமலை - கடலைக் கடைந்தமலை (மந்தரமலை). எய்ப்ப - ஒப்ப. துளைந்து - முழுகி, கலக்கி. மீக்கொள்ளுதல் - அதிகப்படல். வாரிதி - கடல். அலை - கடல், ஆகு பெயர். மாந்தல் - உண்ணல். ஆலி - ஆலியங்கட்டி, நீர்க் கட்டி. மான - ஒப்பாக. பரப்பினிடை - அம் முத்துக்களின் பரப் பிடத்தில். வான் மீன் - ஆகாய நட்சத்திரம். மின்னுதலை யுடையது மீன் என்க. முதனிலை திரிந்த தொழிற்பெயர். யானைக்கு மேகமும் தரளக்குவைக்கு ஆலியும், தரளப் பரப்பிற்கு வான் மீனும், சங்கினங் கட்குப் பல மதியங்களும் உபமானங்களாம் என்றறிக. (௬0)

வழியுஞ் செழுந்தேங் கமலமலர்
மடவார் அமிழ்ந்தே புனலகத்து
மறைந்தால் யாங்கள் நினைப்பிடிக்க
வல்லேம் எனவஞ் சினங்கூறச்
சுழியும் புனனீ அவ்வாறு
துண்ணென் றொளிப்ப மற்றவர்தாந்
துருவிக் காணு தெங்கொழுநர்
சோதிப் பிரான்றாள் தலையென்ன

மொழியும் உறுப்போர் இரண்டையுமே
முன்னிக் காணார் யாமிவளை
முழுதுங் காணேம் எனநாணி
முடிசாய்த் தொதுங்கி நிற்பவருள்
பொழியும் பசிய முகில்பாலிப்
புதுநீ ராடி யருளுகவே
பொற்பார் குளந்தை அமுதவல்லி
புதுநீ ராடி யருளுகவே.

கமல மலர் மடவார் - தாமரைப் பெண்கள்: திருமகள் கலை மகள். மணந்தால் உம்மைதொகுத்தல். வஞ்சினம் - சபதம். துருவி-தேடி. எங்கொழுநர் - எம்முடைய நாயகர்கள். திருமால், நான்முகன். நாணி - வெட்கமடைந்து அருள் மொழியும் பசியமுகில் - அமுதாம்பிகை. (கக)

திரையுந் தனது நறும்புனலில்
திளைத்து முழுகு மடவார்தம்
செழுந்தேந் தொடையற் சுருப்பினங்கள்
சேட்சென் றகலும் படிவிலக்கி
உரையுந் தொழிலும் உள்ளமுந்தன்
னுழைசேர்த் தழுந்து வோர்மலநோய்
ஒருவுந் தொழிலைத் தெரித்திதழி
உறழப் பொன்னும் வெண்டலைபோல்
நுரையுஞ் சடைபோல் துவர்க்கொடியும்
நுணுகும் மதிபோற் கரிக்கோடும்
நுடங்க நடித்து வெளுத்துமறை
நுவலற் கரிய பரம்பொருளைப்
புரையுஞ் செல்வப் பெரும்பாலிப்
புதுநீ ராடி யருளுகவே
பொற்பார் குளந்தை அமுதவல்லி
புதுநீ ராடி யருளுகவே.

தனது என்பது பாலியாற்றிலுடைய தென்றதை. திளைத்து - அழுந்தி. சேண் - தூரம். உரை - வாக்கு. தொழில் - செயல். உள்ளம் - மனம். தன்னுழைச் சேர்த்தழுந்துவோர் - தன்னிடம் ஒப்புவித்துத் தன்னுடனொன்றாய் இரண்டறக் கலந்தழுந்துகின்ற உண்மை ஞானமுள்ள மெய்யன்பர். ஒருவுதல் - நீங்குதல். தெரித்து-

தெரிவித்து. நுடங்குதல் - அசைதல். புரையும் - ஒக்கும். விலக்கித் தெரித்து நடித்து வெளுத்துப் புரையும் பாலி எனக் கூட்டுக. சிவ பெருமானுக்கு வெண்ணிற முண்டாதலால் வெளுத்து என்றார். மலநோய் என்பது மும்மலங்களால் உண்டாகுந் துன்பம். (கூஉ)

வேறு

முகமல ரிணையொளி உகுமதி ஆமென
முண்டக நொந்தயர
முன்கையில் ஏற்றிய சங்கொடு சங்கம்
முழங்கிக் கரைபுரள
மகர இருங்குழை எதிரிய கெண்டை
மலங்கு கயற்குலம்வார்
வாளை கலங்கி யெழுந்து குதிப்ப
வயங்கு சுணங்கிலமென்
றகநெகு புற்புத முலையி னுடைந்திற
அறல்குழல் போற்றகரம்
அணிந்திலம் எனநின தடியில் தன்கவின்
அழியத் திருமருவிப்
புகழ்நிறை யுங்கம லாகரி பாலிப்
புதுநீ ராடுகவே
பூரண ஞான புராதனி பாலிப்
புதுநீ ராடுகவே.

உகுதல் - சிந்துதல். முண்டகம் - தாமரை. நொந்து - வருந்தி. அயர்தல் - இளைத்தல். முன்கையிலேற்றிய சங்கு - கையின் முன்னிடம் தரித்த வளையல். மகர இருங்குழை - மகரமீன் வடிவமாகச் செய்யப்பட்ட பெருமைபொருந்திய காதணி. எதிரிய - எதிர்த்த. வார்வாளை - நீண்ட வாளைமீன். சுணங்கு - தேமல். புற்புதம் - நீர்க்குமிழி. அறல் - கருமணல். இற - இற்றுப்போக. தகரம் - மயிர்ச்சாந்து. பூரண ஞானம் - நிறை ஞானம். (கூங)

விற்புரு வங்குழை யக்கரு நீல
விழித்துணை செங்குவளை
வெல்லநின் மேனி தழைப்பமு கேரென
வீங்கிய நீர்த்துடையா

நிற்புகழ் தெய்வ மடந்தையர் மீதினில்
நீள்சிவி றித்துளையான்
நிரைத்த குறுந்துளி தம்முடல் எங்கும்
நிரைத்தலும் வானவர் தங்
கற்புரை தோள்கள் புதைத்தனர் ஆடக்
கடவுள் சடாமகுடக்
கங்கை யவன்தலை ஐந்தொடு மாடக்
காசினி கொண்டாடப்
பொற்பு மிகுங்கம லாகரி பாசிப்
புதுநீ ராடுகவே
பூரண ஞான புராதனி பாசிப்
புதுநீ ராடுகவே.

விற்புருவங் குழைய - வில்லாகிய புருவம் வளைய. நீல விழித் துணை செங்குவளை வெல்ல - கருமையான கண்களிரண்டும் நீராடலாற் சிவந்து செங்குவளை மலரை வெற்றி கொள்ள. வீங்குதல் - பருத்தல். குடையா - முழுகி. சிவிறி - நீர்த்துருத்தி. முழேர் எனல் - ஒலிக்குறிப்பு. நிரைத்த - ஒழுங்குபடச் செய்த. குறுந்துளி - சிறிய துளிகள். நிரத்தல் - நிறைதல். கல்புரைதல் - மலையையொத்தல். காசினி - உலகம். நீலம் என்றது கரியநீலப்பூ வென்பாருமுளர். (கூ)

க௦. ஊசற்பருவம்

இது குழந்தையை ஊஞ்சலி லேற்றிவைத்துத் தோழியர் அவ் வூஞ்சலை யாடச்செய்தல். இஃது இருபத்தோராவது திங்களில் நிகழ்வது.

ஒழுகொளி பரப்பிக் கதிர்த்தெழும் பரிதியை
ஒழுக்கித் திரட்டியதுபோல்
உரகமுமிழ் செம்மணித் தூணிறுவி அதனும்பர்
ஒளிநிலாக் கான்றகலைகள்
முழுதுநிறை திங்களை உருட்டி நீட்டியதேய்ப்ப
முதிர்வயிர விட்டமிட்டம்
முழுமதியி னின்றிழியும் அமிழ்ததா ரைகளென்ன
முத்தணி வடங்கள் தூக்கிப்

பழுதகலு நவமணிப் பலகையிடை மூட்டியப்
பலகைமேல் மதியமிழ்துணைப்
பச்சிளங் கிள்ளையொன் றேறினால் என்னப்
பரிந்திருந் தருளிமுலைமேற்
புழுகொழுக உயிர்களுக் கருளொழுகும் அமுதம்மை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

கதிர்த்தல் - கிரணம் வீசுதல். ஒழுக்கி - ஒழுங்குபடச் செய்து. திரட்டியது - சேர்த்தது. உரகம் - பாம்பு. (உரம் - மார் பால், கம் - நடப்பது) உம்பர் - மேல். தூக்கி - தொங்கவிட்டு. பழுது - குற்றம். நவமணி-ஒன்பது மணிகள். புழுகு - புநுகு. இழியும் - இறங்கும். பரிதல் - விரும்புதல். (௧௯)

செயலையந் தாருவை உதைந்தாடு தொறுமச்
செழுந்தருப் பூக்கள்சொரியும்
செயலுதைக் காற்றாது தனைநீங்க எண்ணிநந்
தேவைத் தணந்துவிளையாட்
டியலைமேல் கொண்டநின் மீதலர்ப் பூம்பகழி
இளையாது சொரிவதெனவும்
இதுகண் டதற்குநேர் விழிச்சுரும் பிந்தருளி
இளநிலா நகைமுகிழ்ப்ப
அயலுறாஉங் கொடிமுல்லை ஊழ்த்தலர் சொரிந்திடல்
அருந்துணைமை பூண்டுதானும்
அலர்வாளி பெய்திடுந் திறனெனவும் ஏர்காட்ட
ஐம்படை பொறுத்தபச்சைப்
புயலொடு பிறந்தருட் கடலொடு வளர்ந்தமின்
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

செயலை - அசோகு. தாரு - தரு, மரம். செயல் - செய்கை. உதைக்கு - நின்கால் உதையினுக்கு. ஆற்றாது - பொறுக்காமல். தனை - அசோகை. நந்தேவை - நம்முடைய சிவபெருமானை. தணத்தல் - பிரிதல். விளையாட்டியலை - விளையாட்டினது தன்மையை. அலர்ப்பூம் பகழி - மலர் அம்பு. அதற்கு நேர் - அம்மலர்ப் பகழிக்குச்

சரியாய். ஊழ்த்து - மலர்ந்து. துணைமை - துணையாகுந் தன்மை. திறன் - வகை. ஏர் - அழகு. ஐம்படை - சங்கு, சக்கரம், வாள், தண்டு, வில் என்னும் ஐந்து கருவி. பச்சைப்புயல் - திருமால். மின் - அம்பிகையைக் குறித்தது. செயலை மரமானது மலர் சிந்துஞ் செய்கை அலர்ப்பகழி சொரிவதெனவும், முல்லைக்கொடி அலர் சொரிந்திடல் அந்த அசோகுக்குத் துணைபூண்டு தானும் மலர்வாளி பெய்திடுவதெனவும் ஏர்காட்ட என்க. மகளிரால் மலருமரஞ்செடி பத்துள் அசோகு உதைக்கவும், முல்லை சிரிக்கவும் மலருமாதலால் இங்ஙனம் கூறினரென வறிக. இறைவி இறைவனை நீங்கியிருத்தலால் அவளை அவன் பாற்சேர்க்க அவ்விரண்டும் மலர் சொரிந்தன என்பது கருத்து. மகிழ், பாலை, பாடலம், புன்னை, குரா, அசோகு, குருக்கத்தி, மா, சண்பகம், முல்லை என்பன பத்து மரங்கள். இவற்றுள் கொடி செடியும் விரவியிருப்பினும் சுருங்கச் சொல்லல் என்னும் நயம்பற்றி மரங்களெனக் கூறியதென அறிக. இவற்றின் விரியைச் சூடாமணி நிகண்டிலறிக. (கசு)

நிலம்பொலி உயிர்ப்பயிர் மலக்கொடுந் தழல்வெம்மை
நீத்தமெய்ஞ் ஞானமலரா
நின்மலா னந்தச் செழுங்கனி கனிந்தோங்க
நிறையருட் சூல்கொண்டுபொற்
கலம்பொலியும் உருவெலாம் பச்சென் றுதோற்றிக்
கருங்குழற் கற்றைநாப்பண்
கதிர்த்தசிறு கீற்றினன் மின்னியொளி கூர்நுதற்
கார்முகங் கவினவாங்கிச்
சிலம்பொலிசெய் கிண்கிணிப் பருமத்தி னற்பெருந்
தீங்குரல் எடுத்திடையறுத்
திருவருள் தாரைபொழி செய்கைக்கு வாய்ப்பவான்
சேர்ந்துலாய் நிற்றலுறழப்
புலம்பொலியும் அடியார்கள் சிந்தைகுடி கொண்டவள்
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

மலம் என்றது மும்மலங்களை. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. மலரா - மலர்ந்து, செய்யா என்னும் வாய்பாடு. இதனால் மெய்ஞ்ஞானம் மலராயிற்று. கனிந்து - பழுத்து. சூல் - வயிறு வாய்த்தல். கலம் - அணி. நாப்பண் - நடு. கார்முகம் - வில். காரிலுண்டாவது. கவின - அழகுசெய்ய. வாங்குதல் - வளைத்தல்.

சிலம்பு - ஒலிசெய் காலணி. பருமம் - பதினென்கு கோவை மணி வடம். தீங்குரல் - இனிய வொலி. வாய்ப்ப - பொருந்த. வான் - வெளி.

இப்பாட்டில் இறைவியை அருள்மழை பொழியும் கார் எனக் கூறினரென அறிக. (கஎ)

மனக்குல மிடைந்துபின் காட்டவிசை கொண்டாடும்
வண்மையால் நினதுருவெலாம்
மணித்திரள் நிரைத்தெனச் சிறுவெயர் பொடித்தலும்
வழிநின்று பணிகேட்டுநின்
அனக்கவின் நடைத்திறங் கற்கவரும் வெள்ளானை
அஞ்சிச் செவிக்காலெறிந்
தந்தரக் கங்கையை மடுத்துத் துளித்தவெயர்
ஆற்றுமத் திவலைபரவா
நினக்கடிமை பூண்டுமுன் போற்றும்இமை யோர்முதல்
நெடுந்தருப் புல்லிறுதியில்
நிரத்தலால் அனைத்துநின் மயமெனுஞ் செஞ்சொல்லை
நிலையுறுத் திடுவதேய்ப்பப்
புனக்கிளி நிகர்த்தமென் றீங்கிளவி அமுதம்மை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

இடைந்து - வருந்தி. மனக்குலம் பின் காட்ட என்றதனால் உள்ளத்தின் விரைவினும் மிகுதியாக என்பது கருத்தாயிற்று. மணி - முத்து. அது வெயர்வுக் குவமையாயிற்று. வழி - திருவுள்ளக் குறிப்பின்படி. மடுத்தல் - கையினிறைத்தல். நிரத்தல் - கலத்தல். எல்லாம் நின்னிறைவு என்பதை விளக்கியவாறும். (கஅ)

திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச்
செழுங்கயல் உதைந்தூக்கலாற்
செம்பொனின் இழைத்தமக ரக்குழைக ளுஞ்செவிச்
செங்கனக ஊசலாடப்
பங்கய இருக்கைமட மாதரது நோக்கியிரு
பாலுமிரு வேமாட்டவும்
பாயுங் கயற்குலம் அசைக்குமவ் வூசலிற்
பாய்ந்திலதிவ் வூசலெனநீள்

அங்கையின் வலித்துநனி ஆட்டுதொறு நின்வாய்
அரும்புநகை நிலவெழிலினுக்
காங்கவர் முகத்திங்கள் சாயப் புராணமறை
ஆகமம் அளந்தறிவரும்
புங்கவன் மருங்குகுடி கொண்ட அமுதாம்பிகை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

நாட்டம் - கண். ஊக்கல் - அசைத்தல். இழைத்த - தங்கத்தால் இழைத்துச் செய்த. அது நோக்கி - அதைப் பார்த்து. குழைகள் செவியாகிய ஊசலாடுவதை என்க. அரும்புதல் - தோன்றுதல். வலித்து - இழுத்து. சாய்தல் - கவிழ்தல். அளந்து - எல்லை கண்டு.

திண்ணிய பொலஞ்சிகரி வாங்கிய பிரான்சென்னி
தெரிகலா மறையோதிமம்
செப்புபழி மொழிமாறு மாறுனக் கூர்தியாய்ச்
சேர்ந்துநின் தாள்சுமந்து
தண்ணிய நிறுதகண் அருள்கிடைத் துன்னுழிச்
சார்ந்திறைவன் ஊடல்தீரத்
தாள்பணியும் எல்லைமுடி கண்டுகொண் டுயர்கீர்த்தி
தாங்குவான் எண்ணிவரலும்
கண்ணியவவ் வஞ்சனை அறிந்ததனை அலமரக்
காண்டுமென உன்னியேறிக்
ககனத்து முன்பின்ன தாகக் கடாவுதல்
கடுப்பவெண் தாளமொய்த்துப்
புண்ணிய மலர்ந்தனைய ஒண்பலகை ஏறிநீ
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

திண்மை - திரண்ட வன்மை. பொலம் சிகரி - பொன்மலை. வாங்குதல் - வளைத்தல். மறையோதிமம் - பிரமனாகிய அன்னம். பழிமொழி - திருமுடியைப் பார்த்து வந்தேன் என்று சொன்ன பழி மொழி. ஊர்தி - ஏறிச் செல்வது. தண்ணிய - குளிர்ந்த. உழி-இடம். ஊடல் - பிணக்கு. தாள் - இறைவியின் அடி. எல்லை - காலம். தனை - அம்மறை அன்னத்தை. அலமரக் காண்டும் - சுழலச்செய்

வோம். ககனம் - விண். தாளவொண் பலகைக்கு ஒதிமம் உவமான மாமென வறிக.   (௧௦௦)

அரவமுமிழ் செம்மணித் திரள்சுற் றிழைத்திடை
அலங்கொளிய நித்திலத்தால்
அமைத்ததன் நடுச்செழுஞ் செம்பட் டலங்கரித்
தவிர்பலகை மீதிருத்தல்
இரவகல வெங்கதிர் உரும்பரிதி மண்டலம்
இளம்பனிக் கதிர்மண்டலம்
எரிக்கடவுள் மண்டலங் கீழ்தொட்டு முறைமூன்றும்
ஏய்ந்ததூந் தவிசிலடியார்
பரவநீ நின்றநிலை ஒப்பதூ னந்தமெய்ப்
பண்ணவன் விழிச்சுடர்கள்நின்
பாலணுகு காட்சியப் பரிசறிந் தெம்மையும்
பரூஉமணித் தவிசெனக்கொள்
புரவுபூண் டருளென்று வேண்டுதல் கடுப்பவுயர்
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

அரவம் உமிழ் செம்மணி - நாகரத்தினம். சுற்று இழைத்தல்- பலகைச் சுற்றுப்பக்கங்களின் இழைத்தல். இடை-அப் பலகையின் நடுவில். அலங்கு ஒளிய - மிக்க ஒளியினையுடைய. இரவு - இரா. இருத்தலை ஒப்பவும் காட்டியைக் கடுப்பவும் ஊசலாடியருள் எனக் கூட்டுக. புரவு - புரத்தல். ஞாயிறு, திங்கள், எரிகளின் மண்டிலங் கள் உடலினுள் உண்மையை யோக நூலார் மாட்டேனும், சிவவழி பாடு செய்வார் மாட்டேனுங் கேட்டுணர்க.   (௧௦௧)

சுத்தமும் அசுத்தமும் எனப்படுங் கொடுமாயை
தூணக இருளாணவம்
தொடுத்தநெடு விட்டமாக் கருமப் பெரும்பகுதி
தூக்கிய வடங்களாக
வைத்தமா யேயமே பலகையா முடிவிலா
வான்புவன கோடிமுற்றும்
மகிழ்ந்தாடு வெளியாக ஆருயிர்க் குழவிகளை
மரணம் பிறப்பென்னுநோய்

மொய்த்தமணி யூசல்வைத் தாட்டிக் கடைத்தலை
முடங்கா தெடுத்தணைத்து
முதுக்குறை வளித்துமேற் பரமுத்தி விடுத்து
மூவாத ஆனந்தமாம்
புத்தமிழ் தருத்திமெய்த் தாயாய் வளர்ப்பவள்
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

இருள் ஆணவம் - கருமையாகிய ஆணவம். 'இருள்சேர் இருவினை' என்றதாலும் அறிக. கருமப் பெரும்பகுதி - மிக்க வினைப் பகுப்பு. மாயேயம் - தநு, கரண, புவன, போகங்கள். வெளி-விண். குழவிகள் - மக்கள். கடைத்தலை - இருவினை நீக்க முடிவில். முடங்காது - கெடாமல். முதுக்குறைவு - பேரறிவு. மூவாத - கெடாத. ஆனந்தம் - சிவவின்பம். புத்தமிழ்து - புதிய மூவா மருந்து. (கOஉ)

நாந்தகப் பொருபடை விதிர்த்தனைய இமையாத
நாட்டத் தரம்பைமாரும்
நளினக் கரங்கூப்பி எதிர்நிற்கு முகில்வண்ண
நாயகன் முதல்தேவரும்
வேய்ந்தசெம் பொற்பெரும் பூண்களின் இழைத்தபல
வேறுகுல மணிகள் தொறுமவ்
விரிகதிர்ப் பேதத்தி னுக்கேற்ப நின்னூசல்
மின்னிழல் பரப்புதோற்றம்
வாய்ந்தமெய்த் தொண்டுசெயும் அன்பர்கள் உளந்தொறும்
வயங்குபரி பாகபேத
மார்க்கத்தி னுக்கிசைய மன்னிநீ விளையாடும்
வாய்மையைக் காட்டவளிவீழ்
பூந்தகர வார்கருங் கூந்தலமு தாம்பிகை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

நாந்தகம் - வாள். வேய்தல் - அணிதல். பூண் - அணி. வயங்குதல்-விளங்குதல். பரிபாக பேதமார்க்கம்-பக்குவ வேறுபாட்டுநெறி. மன்னி - நிலைத்து. மின்னிழல் பரபத தோற்றங் காட்ட ஆடியருள் எனக் கூட்டுக. (கOங)

அண்டப் பரப்பெங்கும் மண்டிப் படர்ந்தபே
ரானந்த வெள்ளம்வாழ
அருட்சரியை கிரியைசிவ யோகமொடு ஞானமெனும்
அதிகசிவ தருமம்வாழக்
கண்டவர்க் கினியநஞ் சோமேசர் வாழநின்
கட்கடைக் கருணைவாழக்
காசினி ஒருங்குசிவ பத்திகுரு பத்திசங்
கமபத்தி செய்துவாழ
வெண்டிருப் பூதியுயர் அக்கமணி வாழமெய்
விளக்குமஞ் செழுத்துவாழ
வேதநெறி சைவநெறி வாழக் குளந்தைநகர்
மேன்மேற் செழித்துவாழப்
புண்டர நுதல்தொண்டர் தங்குழாம் வாழநீ
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே.

மண்டுதல் - மிகுதல். ஆனந்த வெள்ளம் - சிவம். நால்வகை வழிகளைச் சிவதருமம் என்றதை யறிக. ஒருங்கு - எல்லாம். சங்கமம்- சிவனடியார் கூட்டம். புண்டரம் - நெற்றியிலணியும் முக்கூற்றுக் குறி. அது நீற்றுக்குறி என்க. (க0ௗ)

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

முற்றிற்று

செய்யுள் முதற்குறிப்பு